# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 06 புதன்கிழமை (23-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:330


## ஒவ்வொரு தமிழனும் இங்கு வீரவரலாறாக வாழ்கின்றான்

# ஈழத் தமிழ் மக்களுக்காக சிறை செல்லவும் தயார்!



இரா.திருமாவளவன்.

## தமிழ்க் கூடல் இறுதிநாள் விழாவில் திருமாவளவன் ஆவேசப் பேச்சு

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்23

**ஈழத்தமிழர்கள் இந்த மண்ணில் புரிந்திருக்கின்ற தியாகங்களைப் பார்க்கும் போது குறைந்த பட்சம் அவர்களுக்காக சிறை செல்வதற்குக்கூட நான் தயாரில்லை என்று சொன்னால் நான் தமிழனாக வாழ்வதில் அர்த்தமேயில்லை.**

**இவ்வாறு ஆவேசமாக - உணர்ச்சி பொங்க - தெரிவித்தார் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும் தமிழக சட்டசபை உறுப்பினருமான இரா.திருமாவளவன்.**

யாழ்.நகரில் - வீரசிங்கம் மண்டபத்தில் - நேற்று மாலை நடந்த மானுடத்தின் தமிழ்க் கூடல் இறுதிநாள் பெருவிழாவில் மண்டபம் நிறையத் திரண்டிருந்த பேராளர்கள், பிரமுகர்கள் மத்தியில் திருமாவளவன் சிறப்புரையாற்றினார்.

தமிழகத்தில் இருந்து வந்து கடந்த நான்கு தினங்களாக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' நிகழ்வில் கலந்துகொண்ட அவ

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கண்காணிப்புக் குழுத் தலைவர் பிரபாவுடன் பேச்சு

கிளிநொச்சி,ஒக்.23

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் புருகோவிட் மற்றும் அதன் உறுப்பினர் ஹோக்லான்ட் ஆகியோர் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேற்று கிளிநொச்சியில் சந்தித்து உரையாடினர்.

இச்சந்திப்பில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இது வரை நடைமுறைப்படுத்தப்படாத விடயங்கள், கிழக்கில் இடம்பெற்ற வன்முறைகள், தற்போதைய சமாதான

(12 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழக மீனவர் கரை ஒதுங்கினர்

கடந்த வெள்ளியன்று நாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்டு மூன்று நாள்களாகக் கடலில் தத்தளித்த இந்திய மீனவர் படகொன்று நான்கு மீனவர்களுடன் நேற்றுமுன்தினம் பருத்தித்துறையில் கரை ஒதுங்கியதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது. நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இந்த மீனவர்கள் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். படகு இயந்திரம் செயலிழந்ததால் இவர்கள் தத்தளித்தனர்.

(ஐ-3)


## உள்ளே....

- கிபிர்' ஜெட் விமானம் குளியாப்பிட்டியில் விழ்ந்தது!
- உயர் நீதிமன்றின் தீர்ப்பு நாடாளுமன்றத்தில் அறிவிப்பு
- வாகன 'லைசென்ஸ்' சோதனை டிசெ.31 வரை இடைநிறுத்தம்!
- மானிடத்தின் தமிழ்க் கூடல் பிரகடனம் படத்தொகுப்பு (படங்கள்:அற்புதன், ரமணன்)
- கண்காணிப்புக் குழுவினரை தலைவர் பிரபாகரன் சந்தித்த நிகழ்ச்சியின் படத்தொகுப்பு




கண்காணிப்புக்குழுத் தலைவர் ரொண்ட் புருகோவிட்டும் தலைவர் பிரபாகரனும் சந்தித்துக் கொண்ட காட்சி - அருகில் அன்ரன் பாலசிங்கமும் உள்ளார்.

# உரிமை என்பது இரந்து பெறுவதல்ல!

## அமைச்சர் சந்திரசேகரன் உரை



யாழ்ப்பாணம்,ஒக்.23

உரிமை என்பது - ஆன்புல வலிமையென்பது - இரந்து பெறக்கூடியதன்று. போராடிப் பெறுவதே அது.

தமிழர் விடுதலைப் போராட்டமும், வீரசாதனைகளும் இதனையே தெளிவுபடுத்தி நிற்கின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் சமூக நலத் துறை அமைச்சரும் நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ பிரதி அமைச்சருமான பெ.சந்திரசேகரன்.

'மானுடத்தின் தமிழ்க் கூடலின் இறுதி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது சிறப்புரையில் மேலும் தெரிவித்ததாவது:-

தந்தை செல்வநாயகம், ஜீ.ஜீ.பொன்னம்பலம் முதலிய தமிழ்த் தலைவர்கள் ஜனநாயக ரீதியில் - அஹிம்சை வழியில் - தமிழர்களுக்காகவும், தமிழர்களின் உரிமைகளுக்காகவும் பல வருடங்களாகப் போராடினர்.

தமிழ் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு கட்சி பேதங்களை மறந்த இந்தத் தலைவர்கள் ஒரு காலத்தில் கூட்டணி அமைத்துத் தேர்தலில் போட்டியிட்டனர். அதன் மூலம் இலங்கை வரலாற்றிலேயே முதல் தடவையாக தமிழ்க்கட்சி ஒன்று பிரதான எதிர்க்கட்சியாக அமையும் (11 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டின் அரசியல் ஸ்திரமின்மை சமாதான முயற்சியைப் பாதிக்காது!

## நோர்வே சமாதானக் குழுத் தலைவர் ஹெல்கிஸன்

யாழ்ப்பாணம்,ஒக்.23

அண்மையில் கிழக்கில் இடம்பெற்ற சம்பவங்களோ நாட்டில் நிலவும் அரசியல் ஸ்திரமற்ற தன்மையோ சமாதான நடவடிக்கைகளை எந்த வகையிலும் பாதிக்கவில்லை. சமாதானப் பேச்சுக்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

இப்படிக் கூறினார் நோர்வே சமாதானக் குழுவின் தலைவரும் பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிஸன்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு நேற்று வந்த அவர், யாழ். செயலகத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதைத் தெரிவித்தார்.

யாழ்.செயலகத்திற்கு நேற்று



காலை 10மணிக்கு வருகை தந்த ஹெல்கிஸன், யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் முதலில் பங்குபற்றினார்.

யாழ்செயலக அதிகாரிகள், பொது மக்கள் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.


அதையடுத்து பத்திரிகையாளர்களைச் சந்தித்த அவர் அங்கு கூறியதாவது:-

தொலைக்காட்சிகளில் யாழ்ப்பாண நகரைக் கண்டுள்ளேன். இங்கு தொடரும் இனச் சண்டை தொடர்பாகக் கேள்விப்பட்டிருந்தேன். இன்றுதான் நேரடியாக அந்த நகரைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. மிகவும் அழகான நகரம். அழிவுகளைச் சந்தித்த போதும் தன்னம்பிக்கையுடன் நிமிர்ந்து

(11 ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

# கண்காணிப்புக் குழுத் தலைவர் – பிரபா சந்திப்பு






## 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' -2002



மானுடத்தின் தமிழ்க்கூடல்
இறுதிநாள் நிகழ்வுகளிலிருந்து
சில காட்சிகள்.....

# 'கிபிர்' ஜெட் குண்டுவீச்சு விமானம் குளியாப்பிட்டியில் விழுந்து எரிந்தது!

## இயந்திரக் கோளாறு காரணம்; விமானி தப்பினார்

கொழும்பு,ஒக்.23

இலங்கை விமானப்படையின் 'கிபிர்' ஜெட் குண்டுவீச்சு விமானம் ஒன்று நேற்றுக் காலை குளியாப்பிட்டி பகுதியிலுள்ள நக்காவத்த என்ற இடத்தில் விழுந்து, எரிந்து நாசமானது. அதன் ஒரேயொரு விமானியான பிளைட் லெப்டினன்ட் சிறில் கமகே சிறுகாயங்களுடன் உயிர் தப்பிக் கொண்டார். தென்னந்தோட்டம் ஒன்றில் விமானம் விழுந்ததால் வேறு சேதங்கள் எதுவும் அவருக்கு ஏற்படவில்லை.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து காலை 8.55 மணியளவில் கிளம்பிய இந்தப் போர் விமானம், காலை 9.10 மணியளவில் விபத்துக்குள்ளானது. இந்த விபத்துக் குறித்து விசாரணைகளை நடத்த விமானப்படைத் தளபதி, குழு ஒன்றை நியமித்திருக்கிறார்.

விமானம் கிளம்பிய சிறிது நேரத்திலேயே இயந்திரக்கோளாறு ஏற்பட்டிருப்பதாக விமானக்கட்டுப்பாட்டு நிலையத்துக்கு விமானி அறிவித்திருக்கிறார். ஆயினும், சிறிது நேரத்தில் விமானம் விழுந்துவிட்டது. சுமார் 5மைல் தூரத்துக்கு விமானம், விமானி இல்லாமலேயே பறந்து பின்னர் வீழ்ந்து நொறுங்கியது.(10ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளை தீர்ப்பு பாதிக்கமாட்டாது

## பிரதமர் ரணில் தகவல்

கொழும்பு,ஒக்.23

அரசமைப்பின் 18ஆவது, 19ஆவது திருத்தங்கள் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அரசு முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளை எந்தவகையிலும் பாதிக்காது - இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பான தீர்வு நாடாளுமன்றில் நேற்று அறிவிக்கப்பட்ட பின்னர் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வைத்து வழங்கிய பேட்டி ஒன்றின்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தாவது:-

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எமக்கு அதிர்ச்சியைத் தரவில்லை. அதேவேளை, அரசமைப்புத் திருத்தங்களை நாம் ஏன் கொண்டுவந்தோமோ அந்த இலக்கை நோக்கிய முயற்சிகளை நாம் (10ஆம் பக்கம் பார்க்க)

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நாடாளுமன்றில் அறிவிப்பு!

### கொட்டகதெனிய அரசியலில் குதிக்கிறார்

முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் எச்.எம்.ஜி.பி. கொட்டகதெனிய அரசியலில் ஈடுபடுவதெனத் தீர்மானித்திருக்கிறார்.

'சிஹல உறுமய' கட்சியை இதற்கெனத் தான் தெரிவுசெய்திருப்பதாகவும், பல கட்சிகளிடமிருந்து தனக்கு அழைப்பு வந்தபோதிலும் நாட்டையும் இனத்தையும் கருத்திற்கொண்டு 'சிஹல உறுமய' கட்சியில்சேர தான் தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். (ம)

## 18,19ஆவது திருத்தங்களுக்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம்

கொழும்பு,ஒக்ரோபர்23

**18ஆவது, 19ஆவது அரசமைப்புச் சட்ட திருத்தங்கள் மீதான உயர் நீதிமன்றத் தீர்ப்பை சபாநாயகர் ஜோசப் மைக்கல்பெரேரா நாடாளுமன்றத்தில் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.**

**இத்திருத்தச் சட்டமூலங்களின் சில பிரிவுகள் நிறைவேற்றப்படவேண்டுமானால் அவை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவுடன் அங்கீகரிக்கப்படுவதோடு, சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெறப்படவேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது.**

இத்திருத்த சட்டமூலங்களை சபையில் அன்று சமர்ப்பித்தபொழுது ஆரவாரம் செய்த அரசுக் கட்சியினர் நேற்றுத் தீர்ப்புக்கள் அறிவிக்கப்பட்டபொழுது அமைதியாக இருந்தனர். எதிர்க் கட்சியினரோ பெரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

19ஆவது அரசமைப்புச் சட்ட திருத்தத்தின் 6ஆவது பிரிவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனச்சாட்சிப்படி வாக்களிக்க வகை செய்யப்பட்டிருப்பது, அரசமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியின் செயற்பாட்டை இடைநிறுத்துவதால் அரசமைப்புச் சட்டத்தின் 75ஆவது விதியின் படி, அந்த 6ஆவது விதியை நாடாளுமன்றம் சட்டமாக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பது முக்கியமானதொன்றாகும்.

19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் பிரிவுகள் அரசமைப்புச் சட்டத்தின் 3ஆம் ஷரத்திற்கு முரண்படுவதாகவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவித்திருக்கிறது. இந்தப் பிரிவுகள் விஷேட பெரும்பான்மைப் பலத்துடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதோடு, சர்வஜன வாக்கெடுப்பில் மக்களால் அங்கீகரிக்கப்படவேண்டும் எனவும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் பிரிவுகள் நீக்கப்பட்டு ஒரு வருடம் என்னும் விதி, மூன்று வருடங்களுக்கு மேற்படாத கால எல்லையாக வரையறுக்கப்படுவதன் மூலம் சட்ட முரண்பாட்டை நீக்க முடியும் எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பில் கூறியிருக்கிறது.

18ஆவது அரசமைப்பு சட்ட திருத்தம் குறித்து உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கும் தீர்ப்பில், அத்திருத்தத்தின் 2ஆம் பந்தியை நிறைவேற்ற நாடாளுமன்றத்தின் விசேட பெரும்பான்மைப் பலம் பெறப்படவேண்டும் எனத்தெரி

(10ஆம் பக்கம் பார்க்க)

## சபையில் தீர்ப்பு அறிவிக்கப்பட்டபோது எதிர்க்கட்சியினர் மகிழ்ச்சி ஆரவாரம்!

கொழும்பு,ஒக்.23

18ஆவது, 19ஆவது அரசமைப்புச் சட்டதிருத்தங்கள் மீதான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் அறிவித்த பொழுது எதிர்க்கட்சியினர் மேசைகளில் தட்டி வரவேற்புத் தெரிவித்தனர்; அவர்கள் மகிழ்ச்சி ஆரவாரமும் செய்தனர்.

சபாநாயகர், சபையில் தீர்ப்புக்களை அறிவித்தபொழுது அரசமைப்புச் சட்ட விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சபையில் இருக்கவில்லை. அரசமைப்புச் சட்ட விவகார அமைச்சர் இராஜினாமாச் செய்யவேண்டும் என்று எதிர்க்கட்சி எம்.பிக்கள் சபையில் கோஷமெழுப்பினர். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் பல கேள்விகளையும் எழுப்பினர். ஆனால், அரசுத்தரப்பில் எவரும் பதிலளிக்கவில்லை. (ம)

## ஹெல்கிஸன் - பிரபா இன்று சந்தித்து பேச்சு

யாழ்ப்பாணம்,ஒக்.23

நேற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், இன்று வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துப் பேசுவார்.

விடர் ஹெல்கிஸனோடு நோர்வே வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்மும் யாழ். வந்துள்ளார்.

இவர்கள் முகமாலை ஊடாகத் தரைமார்க்கமூடாக வன்னி செல்வர்.

நோர்வேக் குழுவினரை வே.பிரபாகரன் சந்திக்கும்போது அவரோடு, அவரது இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் உடனிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)



நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த நோர்வே நாட்டுக்குழுவினர் யாழ்.செயலகத்தில் நடத்திய கலந்துரையாடலின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட் பேர்க், சமாதானக் குழுவின் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் மற்றும் அவர்களுடன் வந்த நோர்வே நாட்டு அதிகாரிகள்.

## சமாதான நடவடிக்கைகள் குறித்து வெளிநாட்டு தூதர்களுக்கு விளக்கம்

### நாளை கொழும்பில் விசேட கூட்டம்

கொழும்பு,ஒக்.23

அரசின் சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து சகல வெளிநாட்டுத் தூதுவர்களிடமும் விளக்கிக் கூறப்படும். இதற்கான விசேட கூட்டம் நாளை 24ஆம் திகதி கொழும்பில் நடைபெறும்.

வெளிவிவகார அமைச்சில் காலை 10 மணிக்கு நடைபெறும் இக்கூட்டத்தில் அரசின் சார்பில் அரசமைப்புச் சட்ட விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து விளக்குவார். வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும் அரசின் சார்பில் கூட்டத்தில் பங்குபற்றுவார்.

## முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் 4பேர் பகிஷ்கரிப்பை நிறுத்தினர்

கொழும்பு,ஒக்.23

நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் 9 முஸ்லிம் காங்கிரஸ் எம்பிக்களில் நால்வர் நேற்று நாடாளுமன்ற அமர்வில் பங்குபற்றினர்.

திஸர் தௌபீக், ரிசாத் பதியுதீன், எம்.எஸ்.தௌபீக், அப்ரத் ஆகிய எம்.பிக்களே நேற்றைய சபை நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

மு.கா. தலைவர் ரவூக் ஹக்கீம், பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் ஆகிய இருவரும் வழமை போன்று நேற்று சபையில் அமர்ந்திருந்தனர். (ம)

## களுத்துறைக் கைதிகள் 75 பேரின் வழக்குகளை வாபஸ்பெற ஏற்பாடு

### விவரங்கள் கிடைத்துள்ளன என்கிறார் ரவிராஜ் எம்.பி.

கொழும்பு,ஒக்.23

களுத்துறைச் சிறைச்சாலையில் உள்ள தமிழ்க் கைதிகளில் 75பேர் அதிவிரைவில் விடுவிக்கப்படுவர். இதற்கென இவர்கள் மீதான வழக்குகள் சட்டமா அதிபரால் வாபஸ் பெறப்படும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான என்.ரவிராஜ் தெரிவித்தார். தமிழ் கைதிகள் விடுதலை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து, இந்தத் தீர்வு எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்குகள் வாபஸ் பெறப்படவுள்ள 75 கைதிகளின் பெயர் விவரங்களும் தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

அடுத்த கட்ட நடவடிக்கையாக, மேலும் 75 தமிழ்க்கைதிகளுக்கு எதிரான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு அவர்களை விடுவிக்கவும் -

தீர்ப்பு வழங்கப்பட்டும் இதுவரை விடுதலை செய்யப்படாமல் உள்ள கைதிகளை விடுவிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள அரசு உறுதியளித்துள்ளதாகவும் -

ரவிராஜ் எம்.பி.மேலும் தெரிவித்தார். (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 'Yamaha' Mate 90 மோட்டார் சைக்கிள், Sanyo CLT-165 (5Km) புதியது, Cordless ரெலிபோன் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந.கேதீஸ்வரா, 'நமிலாஸ்', நெல்லண்டை, பருத்தித்துறை.T.P.No. 070 212247 (9774)

நல்ல நிலையிலுள்ள (LML Selector) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: No.10, கில்னர் லேன், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (9780)

நிறைகூடிய தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மிகவும் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட விலைக் கழிவும் உண்டு. (சுத்தம் செய்தல் இலவசம்) வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா (வட்டக்குளம முன்பாக), கட்டப்பிராய். (9789)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9777)

தரமான புறொயிலர் கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1kg 130/- மட்டும். சுத்தம் செய்யப்பட்டது 1kg 200/- தொடர்பு: S.குமரன், 227, பிறவுண் வீதி (நரியன் குன்றுக்கு அருகில்), யாழ்ப்பாணம். (9788)

## கோழித்தீன் விற்பனை

Original Prima கோழித்தீன் 21.10.2002 தொடக்கம் 27.10.2002 வரை விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9720)

## கோழிக்குஞ்சு விற்பனை

ஒரு கிழமை நிரம்பிய Prima, Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9721)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 31-10-2002 வியாழக்கிழமை மாலை விநியோகிக்கப்படும். முற்பதிவு செய்யவும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9776)

## தவறிவிட்டது

21.10.2002 திங்கட்கிழமை யாழ். பஸ்நிலையத்தில் முக்கிய ஆவணங்கள், வன்னி நிவாரணக்கடிதம் உட்பட வேறு பொருள்களும் அடங்கிய பை ஒன்று தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கா.மகாலிங்கம், இல.6, முஸ்லிம் கல்லூரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (9790)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

23-10-2002

HAPPY



BIRTHDAY

திரு.குணநாயகம் அருட்செல்வன், திருமதி அருட்செல்வன் உதயகுமாரி
தம்பதிகளின் செல்வப் புதல்வி

### செல்வி பானுஷா (பானு)

அவர்களின் முதலாவது பிறந்தநாள் இன்றாகும்.
இவரை நல்லூரான் துணையோடு பல்கலைகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவோர்:
அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், சித்தப்பாமார், அன்ரிமார், மாமாமார், மாமிமார், மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.
47/3, அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.
(9787)

## ஈராண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 07 - 07 - 1978



கடலின் மடியில் 23 - 10 - 2000

### கடற்கரும்புலி மேஜர் மயூரன்

(கந்தசாமி - பிரதாஸ்)

ஆறாத வேதனையில் ஆண்டிரண்டு ஆனது
மீளாத நினைவதனில் நெஞ்சமும் தவிக்கிறது
மண்மீட்புச் ாய்ப் புறப்பட்ட புகழ்மணியே!
பண்பட்டோர் மத்தியில் பகலவன் போல் நீயிருந்தாய்!
அன்பு மனம் கொண்டவனே! மண்ணுக்காய்
மாண்ட வீரர்களில் நீயும் ஒருவனானாய்.

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, அப்பா, அண்ணாமார்,
தம்பி, தங்கை மற்றும் உற்றார், உறவினர்.
யாழ்ப்பாணம். (9782)

## சாருகா நகை மாடம்

21.10.2002 திங்கட்கிழமை முதல் எம்மால் புதிதாக

சாருகா நகை மாடம் என்னும்

ஸ்தாபனத்தை 172/A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மங்களகரமாக ஆரம்பித்துள்ளோம் என்பதை எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வோடு அறியத்தருகின்றோம்.

172/A, கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் முன்பாக)
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்கள்:
பா.கோபிநாத் *(கோபி)*,
வ.குணசேகரன் *(குணா)*.

(21.10.2002ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் வெளியான எமது அழைப்பிதழில் பங்குதாரராகிய பா.கோபிநாத் அவர்களுடைய பெயர் தவறுதலாக எம்மால் விடுபட்டுவிட்டது. இதற்கு மனம் வருந்துகின்றோம்). (9781)

## மனமுவந்து வாழ்த்துகின்றோம்



அண்ணாமலைப் பல்கலைக்கழக
"சங்கீதபூஷணம்" விருது பெற்றவரும்,
இந்து கலாசார அமைச்சின்
"இசைக் கலைஞானகேசரி" பட்டம்
பெற்றவரும், நெல்லியடி சனசமூக நிலையத்தின்
"இசைக்கலைவாணி" பட்டம் பெற்றவரும்,
சங்கீத ஆசிரிய ஆலோசகருமான

### செல்வி சரோஜா தம்பு அவர்கள்

நாளை 24.10.2002இல் ஓய்வுபெறுவதையிட்டு
அவரது சேவையை மனமுவந்து
வாழ்த்துகின்றோம். இறைவனது படைப்பில்
கானாமிர்தம் என வர்ணிக்கப்படும்
இசைத்துறைக்குத் தொடர்ந்தும்
சேவையாற்றப் பிரார்த்திப்பதுடன்
இன்னும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வடமராட்சிக் கல்வி வலயம். (C/24366) - ஆசிரிய ஆலோசகர்கள்.

## கேள்வி அறிவித்தல்

### பிரதம பொறியியலாளர் அலுவலகம்
### கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்.

1. கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபையினரால், 2002ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00மணிவரை யாழ்ப்பாணம் பிரதம பொறியியலாளர் (மாகாணம்), கட்டடங்கள் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.
2. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய அல்லது அதற்கு மேல்பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டும் கேள்விப்பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையோராவர்.
3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தை யாழ்ப்பாணம், கட்டடங்கள், திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. தகுதியுடையோர் மட்டும் உரிய கேள்விப் வைப்புப் பணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவர். வைப்புப் பணத்தை யாழ்பான , கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் செலுத்தி, பற்றுச்சீட்டைப் பெற்று, கேள்விப் பத்திரங்களை 2002ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 06 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்) நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| | வேலை விவரம் | பதிவு செய்யும் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| 1 | பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரரேத அறை திருத்தவேலை | எம்-9 | ரூபா 2,000/- | ரூபா 250/- |
| 2. | பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்கூட கட்டட விரிவாக்கம் (கீழ்த்தளம்) | எம்-9 | ரூபா 9,000/- | ரூபா 500/- |

5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு வேலைக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டுமே விநியோகிக்கப்படும்
6. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து வேலை நாள்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள்லாம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

(C/24367)

பிரதம பொறியியலாளர்,
யாழ்ப்பாணம்.

உதயன்

## நாடாளுமன்றைக் கலைக்கும் முயற்சி வெற்றியீட்டுமா?

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்டுவதற்கு முயன்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. அதற்கான அரசமைப்புத் திருத்தத்தையும் கொண்டுவந்தார்.

ஆனால், அந்தத் திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத் தீர்ப்பு பிரதமர் ரணிலை இரண்டும் கெட்டான் நிலையில் சிக்க வைத்துவிட்டது.

உயர்நீதிமன்றத் தீர்ப்புப்படி, இந்தத் திருத்தத்தைச் சட்டபூர்வமானதாக்க வேண்டுமாயின் அதற்கு சர்வஜன வாக்கெடுப்புமூலம் மக்கள் அனுமதி பெற வேண்டும்.

தற்போதைய நிலையில் அத்தகைய சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தினால் அதில் வெற்றியீட்டுவது ஒன்றும் பிரதமர் ரணிலுக்கு கஷ்ரமான காரியமல்ல. தமிழ்க் கட்சிகளின் ஆதரவுடன் மிக இலகுவாக அத்தகைய சர்வஜன வாக்கெடுப்பில் பிரதமர் ரணில் வெற்றியீட்டுவார் என்பது உறுதி.

ஆனால், அதற்குமுன்னர் அந்த 19ஆவது திருத்தத்திற்கு நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையை அவர் பெற்றாகவேண்டும்.

அச்சட்டமூலம் நாடாளுமன்றில் மூன்றில் இரு பங்கு எம்.பிக்கள் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டால் தான் அதன்பின்னர் மக்கள் ஆதரவுபெற சர்வஜன வாக்கெடுப்புக்குப் போகமுடியும்.

ஆனால், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு பிரதமர் ரணிலுக்கும் அவரது அரசுக்கும் இன்றைய நிலையில் கிட்டுவது துர்லபமே.

இந்தக் காரணத்தினால்தான், நாடாளுமன்றைக் கலைத்துவிட்டு, புதிய பொதுத் தேர்தலுக்கு முகம் கொடுக்க விரும்புகின்றார் ரணில்.

ஆனால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள அவரது அரசு, நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்றத் தீர்மானம் ஒன்றின்மூலம் கோரினாலும், நாடாளுமன்றம் கலைக்கப்படுமா? புதிய தேர்தலுக்கு அது வழிசெய்யுமா? - என்பதுதான் இப்போதைய கேள்வி.

நாடாளுமன்றக் கலைப்புப் பற்றிய முடிவை எடுக்கும் அதிகாரம் எமது அரசமைப்பின்படி முற்றுமுழுதாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிக்கே உரியது.

இதுவிடயத்தில், நாடாளுமன்றத்தைக் கலைக்கக்கோரும் நாடாளுமன்றத் தீர்மானம் ஜனாதிபதியைக் கட்டுப்படுத்துமா என்பது சந்தேகத்துக்குரியது.

அத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதி பின்னடிக்கலாம்.

ஓர் அரசு, பெரும்பான்மையை இழக்கும் வரை அல்லது பெரும்பான்மையை கொண்டிருக்கும் ஒரு தரப்பு, அரசு அமைக்க உரிமை கொண்டுள்ளபோது நாடாளுமன்றைக் கலைக்கமாட்டேன் என ஏற்கனவே கடிதம்மூலம் நாடாளுமன்றுக்கு உறுதியளித்திருக்கின்றார் ஜனாதிபதி.

அந்த உறுதிமொழியை தற்போதைய தனது செயற்பாட்டுக்கு ஆதாரமாகவும், முன்னறிவிப்பாகவும் கூடக் காட்டுவார் அவர்.

பிரதமர் ரணில் நாடாளுமன்றைக் கலைக்கும்படி கோரினாலும் உடனடியாக அதைச் செய்ய ஜனாதிபதி மறுக்கக்கூடும்.

தனது அரசைத் தொடர்ந்து ஆட்சியில் நிறுத்தி, அதன்மூலம் பிரதமர் பதவியில் நீடிக்க ரணில் மறுத்தால், அப்பதவியை எதிரணி தரப்பைச் சேர்ந்த ஒருவருக்கு ஜனாதிபதி வழங்கலாம்.

அத்தகைய நிலை வந்தால் எதிரணியில் - ஜனாதிபதியின் ஆதரவைப் பெற்ற ஒருவர் பிரதமர் ஆவார்.

பிரதமர் பதவியை ஏற்ற பின்னர், நாடாளுமன்றில் தனது பெரும்பான்மையை நிரூபித்துக்காட்டும்படி அவரிடம் ஜனாதிபதி கோருவார்.

அவ்வாறு பிரதமர் பதவியை ஏற்கும் எதிரணிப் பிரமுகர் அதன்பின்னர் நாடாளுமன்றத்தில் போதிய பெரும்பான்மையைக் காட்டமுடியாதவராகப் போகலாம்.

அதனால், வேறு வழியின்றிய பின்னர் நாடாளுமன்றைக் கலைக்கவேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டாலும் புதிய பொதுத்தேர்தல் வரையான காபந்து அரசு தற்போதைய எதிர்க்கட்சியிடமே சென்றுவிடும்.

அத்தகைய நிலையில் பொதுத் தேர்தலை எதிர்கொள்வது தமக்கும் தாம் சார்ந்த எதிரணித் தரப்புக்கும் மிக வாய்ப்பானதாக இருக்கும் என ஜனாதிபதி கருதுகின்றார்.

எனவே, நாடாளுமன்றைக் கலைக்கும்படி பிரதமர் ரணில் இப்போது கோரினாலும், அது சுலபத்தில் அவரது விருப்பப்படி நடந்துவிடாது என்பதே யதார்த்தமாகும்.

# போராடினாலேயே தமிழனுக்கு வாழ்வு வரலாறு இதைத்தான் உணர்த்துகிறது

## 'தமிழ்க் கூடலில்' நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன்

யாழ்ப்பாணம்,ஒக்.23

போராடினாலேயே தமிழனுக்கு வாழ்க்கை என்றாகிவிட்டது. அது அஹிம்சை ரீதியான போராட்டமாக இருந்தாலும் சரி, ஆயுத ரீதியிலான போராட்டமாயினும் சரி, நாம் போராடியே ஆகவேண்டும். கடந்தகால வரலாற்றுத் தகவல்கள் இதனை உணர்த்துகின்றன.

- இவ்வாறு தெரிவித்தார் நிதர்சனம் பொறுப்பார் சி.சேரலாதன். 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு வரவேற்புரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இன்றைய சமாதானத்திற்கான சூழலை உருவாக்குவதற்காக எத்தனை ஆயிரம் மாவீரர்கள் தங்கள் இன்னுயிரை தியாகம் செய்துள்ளனர். பெரும்பான்மை இனத் தலைவர்களுடைய, உளமாற்ற சிந்தனையின் வெளிப்பாடுதான் இந்த நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும்.

தமிழர்கள் எல்லோருமே ஒன்றிணைந்து போராட வேண்டும். வன்னிக் காட்டுக்குள்ளே புலிகளுடைய வாழ்வு முடிந்து போகும் என்று உலகம் எண்ணியிருந்தபோது, புலிகள் இயக்கம் வீறுகொண்டெழுந்தது. அதற்கு வன்னியிலிருந்த அனைத்து மாவட்ட மக்களும் உறுதுணையாக இருந்தனர்.

அதேவேளை - இந்தக் காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் 300இற்கும் அதிகமான எமது போராளிகள் யாழ்நகர வீதிகளில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஒவ்வொரு போராளியினதும் தியாகத்தினாலேயே எமது விடுதலைப் போராட்டம் இன்று பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது.

அச்சுவேலிப் பகுதியில் வீட்டுக்குள் மறைத்து வைத்திருந்த தன்னுடைய மகனையும் மற்றும் போராளிகளையும் காப்பாற்றுவதற்காக, இராணுவத்தை மறித்து சண்டைபிடித்து, தான் துப்பாக்கிச் சூடு வாங்கி இறந்தாள் ஒரு தாய். அந்த சம்பவத்திலே தாய் முன்னிலையில், மகனும் மற்றும் போராளிகளும் கொல்லப்பட்டனர். மகன் முன்னிலையிலேயே தாய் சுடப்பட்டு இறந்தாள். இதுபோன்ற எண்ணற்ற தியாக வரலாறுகளை எமது போராட்டம் கொண்டுள்ளது.

இந்த 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' கலைஞர்களை, அறிஞர்களை ஒன்றிணைப்பதற்காக கூட்டப்பட்ட நிகழ்வு அல்ல. எங்களுடைய ஒற்றுமையினால், கூட்டு முயற்சியினால் எமது சமுதாயத்தின் எதிர்கால வரலாறு தீர்மானிக்கப்படப்போகிறது என்பதனை நாம் அறிந்துகொண்டு - அதனடிப்படையில் செயலாற்றவேண்டும் - என்றார்.

(எ-9-4)

## திட்டமிடப்பட்ட இன ஒடுக்கு முறைகளால்

# தமிழர்கள் அனுபவித்த கொடுமைகளை வெளிக்கொணர்ந்தவர்கள் இலக்கியவாதிகளே!

## 'மானுடத்தின் தமிழ்க் கூடலில்' நாவலாசிரியை தாமரைச்செல்வி

மண்டைதீவு,ஒக்.23

காலாதிகாலமாக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இன ஒடுக்குமுறை காரணமாக தமிழர்கள் பல்வேறு வகையிலும் துன்பங்களை அனுபவித்தனர்.

- இவ்வாறு தமிழர்கள் அனுபவித்த துன்பங்களை வெளியுலகுக்குத் தெரியப்படுத்துவதில் முன்னின்றவர்கள் இலக்கியவாதிகளே.

"மானுடத்தின் தமிழ்க் கூடல்" நிகழ்வின் சிறுகதை அமர்வில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கிய நாவலாசிரியை தாமரைச் செல்வி இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த சனியன்று நடைபெற்ற நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு புதிய பரிமாணங்களைத் தந்தவை சிறுகதை இலக்கியங்களும் இலக்கியப் படைப்புக்களுமாகும். இவை அனைத்தும் 'பரதன்' தொடக்கம் 'யார் உன்னை அழைத்தார்' வரை தொகுக்கப்படவேண்டியது.

1956இல் இருந்து இலங்கையில் இன அடக்குமுறை ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து பாராட்டப்பட்டு வந்த இனப்பாரபட்சம் 1956இல் ஒடுக்குமுறையாகப் புதிய பரிமாணமெடுத்தது. நாடாளுமன்றத்திற்கு வெளியில் தமிழர்கள் தாக்கப்பட்ட அதே நேரத்தில், நாடாளுமன்றத்திற்குள் தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருந்தது.

பல்லினத் தன்மைவாய்ந்த சமூக அமைப்பிற்கு ஏற்றதாகச சட்டங்கள் அமையவில்லை. இதனால் 1958, 1977, 1983 என ஒடுக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. இந்தக் கொடுமைகளை வெளியுலகிற்குக் கொண்டு வந்தவர்கள் இலக்கியவாதிகளே. விடுதலை நோக்கிய ஈழத்துச் சிறுகதை இலக்கியத்திற்கு வித்திட்டவர்கள் அவர்களே. இந்தவகையில் இலங்கையில் உள்ள அனைத்து எழுத்தாளர்களும் பத்திரிகைகளும் தமது பங்களிப்பை செய்துள்ளனர் - என்றார்.



'சுதந்திரன்', 'அலை', 'திசை', 'வெளிச்சம்' போன்ற பத்திரிகைகளையும் ஏனைய பத்திரிகைகள், எழுத்தாளர்கள் அவர்களின் ஆக்கங்கள் மலையக எழுத்தாளர், கிழக்கிலங்கை எழுத்தாளர்களைப் பட்டியல் போட்டுக் காட்டிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இடப்பெயர்வின்பொழுது வன்னி வெளியுலகத் தொடர்பற்றிருந்தது. இருள் சூழ்ந்த அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த எழுத்தாளர்களும், நாங்களும் வெளியில் இருந்து பத்திரிகைகளை பெறமுடியவில்லை. பல கஷ்டத்தின மத்தியிலேயே சிலவற்றைப் பெற்றோம்.

இடம்பெயர்ந்த எழுத்தாளர்கள் வன்னியில் பிறந்து, வன்னியில் வளர்ந்த எம்மோடு சேர்ந்து, தோழோடு தோள் சேர்ந்து விடுதலை இலக்கியம் படைத்தனர். அவை அனைத்தும் தொகுக்கப்பட வேண்டும். நாங்கள் வன்னிக்குள்ளேயே இடம்பெயர்ந்துகொண்டிருந்தோம். அது வீடு திரும்புதலுக்காகவே இப்பொழுது இங்கு வந்துள்ளோம் - என்றார் அவர். (எ-88)

# வெளிநாடு செல்ல பணம் தேவை; அதற்கே கடத்தல் நாடகமாடினேன்!

## அக்கரைப்பற்று இளைஞன் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.23

தனது சகோதரன் அங்கம் வகிக்கும் கட்சியிடமிருந்து ஒரு தொகைப் பணத்தை பெற்றுக்கொள்வதற்காகவே தான் கடத்தப்பட்டதைப்போன்று நடித்ததாக அக்கரைப்பற்று முஸ்லிம் இளைஞர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்த இளைஞன் கடத்தப்பட்டதாகச் செய்தி பரவியதையடுத்து அக்கரைப்பற்றில் பெரியளவில் ஹர்த்தால் நடத்தப்பட்டது. இவரைக் கடத்தியதாகப் பலதரப்புகள்மீதும் குற்றஞ் சாட்டப்பட்டது.

கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட மேற்படி இளைஞன் அவரது வீட்டில் இருந்தபோது பொலீஸாரால் கண்டு பிடிக்கப்பட்டார்.

தன்னைக் கடத்தியவர்கள் பின்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியின் அருகே தன்னை விடுவித்துவிட்டதாக பொலீஸாரிடம் அந்த இளைஞன தெரிவித்தார். ஆனால், அவரது வாக்குமூலம் உறுதியற்றதாகவும், தெளிவற்றதாகவும் இருந்ததால் பொலீஸார் தீவிர விசாரணை நடத்தினர்.

இதில் அந்த இளைஞன எவராலும் கடத்தப்படவில்லை என்பது தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வெளிநாட்டுக்குச் செல்வதை இலட்சியமாகக் கொண்டிருந்த அந்த இளைஞன் அதற்குத் தேவைப்படும் பணத்தைத் தேடிக் கொள்ளவே கடத்தல் நாடகத்தை நடத்தியதாகத் தெரியவந்துள்ளது.

இந்த இளைஞனின் சகோதரர் தமிழ்க்கட்சியொன்றில் அங்கம் வகித்ததாகவும் -

கடத்தப்பட்ட தன்னை விடுவிக்க பணயத்தொகையாகச் செலுத்தவேண்டும் எனக்கூறி ஒரு தொகைப் பணத்தைத் தனது சகோதரர்மூலம் அக்கட்சியிடமிருந்து பெற்றுக்கொள்ள இந்த இளைஞன் திட்டமிட்டதாகவும்-

விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி இளைஞனின் நண்பர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தனது கடத்தல் நாடகம் இப்படி ஒரு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றோ, ஹர்த்தால் நடத்தப்படும் என்றோ தான் எதிர்பார்க்கவில்லை என்றும் -

நிலைமை மோசமானதையடுத்தே கடத்தல் நாடகத்தை முடித்துக்கொண்டதாகவும் -

அந்த முஸ்லிம் இளைஞன் குறிப்பிட்டதாகக் கூறப்படுகிறது.

மேற்படி இளைஞரும், நண்பரும் மேல் விசாரணைகளுக்காகக் குற்றப் புலனாய்வுத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கல்முனைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயந்த ரத்னாயக்க தெரிவித்தார்.

(ஓ)

### நாளை

ஐப்பசி 07
வியாழக்கிழமை
(24.10.2002)
திதி : திருதியை
மாலை 6.28 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
பிற்பகல் 1.06 வரை.
சுபநேரம் : 7.32 - 9.02
ராகுகாலம் : 1.32 - 3.02
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

தொலைவிலிருப்பதை தொல்லைபட்டுப் பார்ப்பதை விட, கையிலுள்ள பணியை உடனடியாகச் செய்துமுடிப்பது மேல்.

# பரிசளிப்பும், நிறுவுநர் தினமும்

சுழிபுரம், ஒக்.23

சுழிபுரம் காட்டுப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் நிறுவுநர் நாளும், பரிசளிப்பு விழாவும் பாடசாலை அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

வாழ்த்துரையை ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார். பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதிகளான ஆர். கணேசமூர்த்தி மற்றும் திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.செல்லையா, வி.சேனாதிராஜா, எ.கணேசலிங்கம், திருமதி நகுலா கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.(எ-28)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

சபாபதிப்பிள்ளை தருமலிங்கம்



தோற்றம் 20-07-1938 மறைவு 23-10-2001

அன்போடு எம்மை ஆதரவாய் அரவணைத்து
அன்புமொழி பேசிய அழகு முகம் மறைந்ததோ?
இன்முகங்காட்டி எம் இதயத்தில் இடம்பிடித்த
தந்தையே நீ சென்ற இடம்தான் எதுவோ?
உங்கள் முகம் மறைந்து ஓராண்டு ஆனாலும்
உள்ளத்தில் உம்நினைவு நிலைத்தே விட்டது
என்றுமே எம்முடன் இணைந்து நீர் இருப்பதால்
இதயத்தால் அஞ்சலி செலுத்துகின்றோம் இன்று.

பிரிவால் துயருறும்:
மனைவி: மேரி ஹாட்ஸ்,
மகள், உற்றார், உறவினர்.

அச்சுவேலி,
தோப்பு. (9773)

## எம் நீங்கா நினைவில்
## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 - 04 - 1925



உதிர்வு 08 - 11 - 1995

### திருமதி கமலாம்பாள் சுந்தரமூர்த்தி

*(தொண்டைமானாறு)*

அன்பின் திருவுருவாய் - எம்மை
ஆதரித்த அம்மா ஆண்டுகள் ஏழானாலும்
ஆறாது எம் துயரம்.
என்றுமே உங்கள் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டும்:

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதர-சகோதரிகள்.

சுந்தரமூர்த்தி அன் சன்ஸ்
*210, ஆஸ்பத்திரி வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.* (9723)

# முகாமைத்துவ பயிலுநர் பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம்,ஒக்.23

இலங்கை வங்கியினால் அண்மையில் நாடளாவியரீதியில் நடத்தப்பட்ட முகாமைத்துவ பயிலுநர் (உள்ளகம்) எழுத்துப் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ரி.தயாளன், சித்தியடைந்துள்ளார்.

நாடளாவியரீதியில் 335 பேர் இப் பரீட்சைக்குத் தோற்றிய போதிலும், யாழ்.மாவட்டத்தவர் ஒருவர் உட்பட 79 பேர் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# புதிய பத்து ரூபா நாணயத்தாள்

கொழும்பு,ஒக்.23

மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள புதிய பத்து ரூபா நாணயத் தாள் புழக்கத்துக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மத்திய வங்கி ஆளுநர் ஏ.எஸ். ஜெயவர்தன நேற்று முன்தினம் நிதி அமைச்சில் வைத்து நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸியிடம் புதிய 10 ரூபா நாணயத்தாளைக் கையளித்தார்.

இந்தப் புதிய நாணயத்தாளில் மத்திய வங்கி ஆளுநரின் கையொப்பத்துடன் முதன்முறையாக நிதி அமைச்சர் சொக்ஸியின் கையொப்பமும் இடம்பெற்றிருக்கிறது.

புழக்கம் காரணமாகப் பழுதடைந்த 10 ரூபா நாணயத்தாள்களைப் புழக்கத்தில் விடுவதற்கே புதிய நாணயத்தாள் வெளியிடப்பட்டுள்ளது என்று நிதியமைச்சர் தெரிவித்தார். (எ)

# கந்தபுராண படிப்பு

சண்டிலிப்பாய்,ஒக்.23

சுழிபுரம் கதிர்வேலாயுத சுவாமி (பெரிய தம்பிரான்) ஆலயத்தில் வருடந்தோறும் நடைபெறும் கந்தபுராணப் படிப்பு இம்முறையும் நடைபெற்று வருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றதைத் தொடர்ந்து கந்தபுராண படிப்பு ஆரம்பமாகியுள்ளது.

தினமும் பிற்பகல் இரண்டு மணிக்கு இப்படிப்பு நடைபெறும். எதிர்வரும் ஜனவரிமாதம் தைப்பூச தினம் வரை தொடர்ந்து இப்படிப்பு இடம்பெறும்.

பண்டிதர் தி.பொன்னம்பலவாணர், சைவ சித்தாந்த பண்டிதர் செ.சிவபாதம் ஆகியோர் இப்புராண படிப்புக்கு பயன் சொல்லி வருகின்றனர். (ஓ-135)

## தேவை

*மின்சார உபகரணங்கள் விற்பனையில் அநுபவமுள்ளவர்கள் தேவை. நிறுவனங்களில் விற்பனையாளராகக் கடமையாற்றிய சான்றுப் பத்திரப் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.*

வயதெல்லை:- 25-40 வரை
கல்வித்தகைமை:- O/L,
ஆங்கிலத்தில் திறமைச்சித்தி (C)

விளம்பர இல-1681
C/o உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம். (9765)

# நல்லூர் பிள்ளையார் ஆலயத்தில் அங்கிகள், நகைகள் திருட்டு!

## ஞாயிறு நள்ளிரவு சம்பவம்

கொட்டும் மழையைச் சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள் ஆலயத்தினுள் நுழைந்து 75ஆயிரம் ரூபா பெறுமதியான அங்கிகள் தங்க நகைகள் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

நல்லூர் ஆலய மேற்கு வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் கோயிலில் இரவு கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தத் திருட்டுச சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தினுள் கூரைவழியாக உள்நுழைந்த திருடர்கள் நகைகள், அங்கிகள் வைக்கப்பட்டிருந்த அலுமாரியை உடைத்து இப்பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஆலய குருக்களினால் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-86)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழக 22ஆவது பட்டமளிப்பு விழாவில் நுண்கலைமாணிப் (பரதநாட்டியம்) பட்டம்பெற்ற

தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த

செல்வி கவிதா சபாரத்தினம்

அவர்களை மேலும் பல சிறப்புகள்பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*தொல்புரம் கிழக்கு,*
*சுழிபுரம்.*

நண்பர்கள்
ப.நோ.கூ.சங்கம், சங்கானை.

(9697)


கூரை அமைப்பில் புதிய அலை
அன்டன் சுப்பர் ஷெல்ரா




அன்டன் சுப்பர் ஷெல்ரா
அன்டன்
சுப்பர் ஷெல்ரா
பொருத்துவதற்கு எற்றவை
உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்ற் அந்தனீஸ் ரூவ்பிங் (பிறைவேட்) லிமிட்டட்
super Shelta
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 324261-5, 337283-5 ,பெக்ஸ்: 440644






கிழக்கிற்கொரு சக்தி...
இலங்கைக்கு
அசுர சக்தி...
No.1 CEMENT IN SRI LANKA
மிட்சுயி சிமெண்ட்
MITSUI CEMENT
எங்கள் நாட்டின் அபிமானமிக்கதோர் தயாரிப்பு

# 'தமிழால் சிங்களம் போஷிக்கப்பட்டது' என்கிறார் தென்னிலங்கை எழுத்தாளர்

மண்டதீவு,ஒக்.23

சிங்கள மொழி தமிழ் மொழியால் போஷிக்கப்பட்டுள்ளது. சிங்கள இலக்கியங்கள், சிலப்பதிகாரம், திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களால் வளப்படுத்தப்பட்டுள்ளதுடன், மேற்கோள்களாகவும் எடுத்தாளப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவித்தார் சிங்கள மொழி இலக்கிய எழுத்தாளரும், மொழிபெயர்ப்பாளருமான விஜயரத்தின. கடந்த ஞாயிறுக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற மாநாட்டின் ஒன்றுகூடல் நிகழ்வில் பி.ப.3.30 மணிக்கு நடைபெற்ற மொழிபெயர்ப்பு அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினை அரசியல் சம்பந்தமானது. அதற்குக் காரணமாக இருந்தவர்கள் அரசியல்வாதிகளே. இந்தப் பிரச்சினை சிங்களவர் - தமிழரிடையே இடைவெளியை ஏற்படுத்தியது. இனங்களிடையேயான பரஸ்பரபுரிந்துணர்வை மொழிபெயர்ப்பின் மூலம் ஏற்படுத்தலாம்.

அரசியல்வாதிகளே மொழி வேறுபாட்டை ஏற்படுத்தினர். வேறுபாட்டிற்குக்காரணம் 56ஆம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டமே. இதனால், சிங்கள மொழிமீது தமிழருக்கு வெறுப்பு ஏற்பட்டது.

தமிழில் பத்திரிகைகள் தோன்றிய பின்புதான் சிங்களத்தில் தோன்றின. 5 தசாப்தங்களில் நாடகம், நாவல், கவிதை, சிறுகதை போன்றவற்றில் சிலவே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதனால், தென்பகுதி மக்கள் தமிழரின் துயரங்களை உணர முடியாதவர்களாக இருந்தனர். அவர்களது உணர்வை தமிழர்களும் அறிய முடியவில்லை.

'யாழ்ப்பாணத்து இரவுகள்' என்ற சிறுகதை மொழிபெயர்க்கப்பட்டு 'சிலுமின' பத்திரிகையில் வெளிவந்த பொழுது யாழ்ப்பாணத்து மக்கள் இப்படியாகத் துன்பம் அனுபவிக்கிறார்களா என்று சிங்கள மக்கள் திகைத்துப்போனார்கள்.

சிங்கள மொழியிலுள்ள 'பிசாசின் இரவுகள்' என்ற இலக்கியத்தில் வராத துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் தமிழர்கள் முகங்கொடுத்துள்ளனர். இனப்பிரச்சினை பற்றி சிங்களத்தில் வெளிவந்த இலக்கியங்களை தமிழர்களும் தமிழில் வெளிவந்தவற்றை சிங்கள மக்களும் அறியமுடியாதுள்ளனர்.- என்று அவர் தெரிவித்தார். (ஒ-88)

# காஞ்சிரங்குடா படுகொலை விசாரணைகள் ஆரம்பமாகின

திருக்கோவில்,ஒக்.23

காஞ்சிரங்குடாவில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ள நியமிக்கப்பட்ட குழுவின் விசாரணைகள் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகின.

பிரதமரின் ஆலோசனைப்படி உள்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் தலைவரான ஓய்வுபெற்ற ஏயார்வைஸ் மார்ஷல் ஹரிகுணதிலக்க தலைமையில் விசாரணைகள் நடைபெற்றன.

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் ஆரம்பமான விசாரணைகளின் போது குழுவின் அங்கத்தவர்களான ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஓ.பி.வீரசிங்க, பட்டதாரி ஆசிரியர் சாமித்தம்பி விவேகானந்தா ஆகியோரும் செயலாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஜே.சவுந்தனும் சமுகமளித்திருந்தனர்.

காலையிலிருந்தே சம்பவம் தொடர்பாக சாட்சியமளிக்க பலர் முண்டியத்ததைக் காணமுடிந்தது. காஞ்சிரங்குடா சம்பவத்தில் காயமுற்றவர்களுக்கான மற்றுமொரு விசாரணை அக்கரைப்பற்று மாஜிஸ்திரேற்றில் நடைபெற்றதால் அவர்களுக்கு சாட்சியமளிக்க வசதியாக பிறிதொரு நேரம் ஒதுக்கப்பட்டது.

இன்னும் மூன்று தினங்களுக்கு விசாரணை நடைபெறும். நேற்றுமுன்தினம் மதியம் வரை 10இற்கும் மேற்பட்டோர் தமது சாட்சியங்களை பதிவு செய்தனர். பெரும்பாலான சாட்சியங்கள் அதிரடிப்படையினருக்கு எதிராக பதிவுசெய்யப்பட்டன என்று தெரிய வருகிறது. (எ)

# கடும் மழையால் பல பகுதிகளில் 10 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு!

கொழும்பு,ஒக்.23

நாட்டின் பலபகுதிகளில் கடும் மழையால் சுமார் 10ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சமூகசேவைகள் திணைக்களம் தெரிவிக்கின்றது. இவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

வத்தளைப் பகுதியில் 1,982 குடும்பங்களும் ஜா-எல பகுதியில் 1,110 குடும்பங்களும் நீர்கொழும்பு பகுதியில் 860 குடும்பங்களும் கட்டானப் பகுதியில் 1,000 குடும்பங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

பொறளை, கொட்டாவீதிப் பகுதியிலும் மாளிகாவத்தை பகுதியிலும் நூறு குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறன்றன என்று கொழும்பு பிரதி மேயர் அசாத்சா தெரிவித்திருக்கிறார்.

ஹோமாகம பகுதியில் மதில் சுவர் இடிந்து வீழ்ந்ததில் பெண்ணொருவர் பலியானார். பெல்லன்வில - அத்திடிய வீதியில் அத்திடிய பாலம் நீரில் மூழ்கியதால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

களுத்துறைப்பகுதியில் மத்துகம - கலவான வீதியும் அளுத்கம - மத்துகம வீதியும் பல இடங்களில் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. பல வீடுகளும் பாதிக்கப்படிருக்கின்றன. களுத்துறை - இரத்தினபுரி பகுதிகளில் வெள்ள அபாயம் நிலவுகிறது. களு கங்கையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

காலி மாவட்டத்தில் 600 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஜின் கங்கையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. மத்தேகம பகுயில் இரு வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. மாத்தறை, வெலிகம பகுதிகளில் சுமார் 25 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. (ஒ)

# தேர்தல் ஆணையாளரின் உத்தரவுப்படி இயங்க அரச ஊடகங்கள் இணக்கம்

கொழும்பு,ஒக்.23

தேர்தல்களின்போது தேர்தல் ஆணையாளரின் ஆணைப்படி நடந்து கொள்வதென அரச ஊடக நிறுவனங்கள் உயர்நீதிமன்றத்தில் உறுதியளித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரியா தாக்கல் செய்த மனுமீதான விசாரணையின்போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

அவர் தனது மனுவில் கடந்த பொதுத் தேர்தலின்போது பல அரச ஊடகங்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு சார்பாகச் செயற்பட்டன எனக் குறிப்பிட்டிருந்தார்.

தேர்தல் ஆணையாளரின் உத்தரவிற்கமைய செயற்படவிருப்பதாக ஊடகங்களின் தலைவர்கள் தெரிவித்துள்ளதால், இந்த வழக்கைச் சுமுகமாகத் தீர்க்கமுடியும் என ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜெயமான தெரிவித்தார்.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையில் மூன்று நீதிபதிகள் கொண்ட குழு இந்த மனுதொடர்பான விசாரணையை எதிர்வரும் ஜனவரி மாதம் 13ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

அன்றைய தினம் இந்த விவகாரத்தைத் தீர்த்து வைப்பதற்கான சாத்தியககூறுகள் பற்றி ஆராயப்படும் என நீதிபதிகள் தெரிவித்தனர். (எ)

## பண்டத்தரிப்பில் நாளை கட்டாக்காலி நாய் அழிப்பு

பண்டத்தரிப்பு பகுதியில் நீண்டகாலமாக பொதுமக்களுக்கு உபத்திரவம் கொடுத்துவரும் கட்டாக்காலி நாய்கள் நாளை அழிக்கப்படவுள்ளன.

எனவே, பண்டத்தரிப்பு வாசிகள் வளர்ப்பு நாய்களை நாளை வீடுகளில் கட்டி வைக்கவேண்டுமென பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார். (எ-135)

## பருவமழையைத் தொடர்ந்து

# தென்மராட்சியில் காலபோக நெல்விதைப்பு ஆரம்பம்

தென்மராட்சி,ஒக்.23

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த இருதினங்களாக மழை பெய்துவருவதையடுத்து படையினரால் அனுமதிக்கப்பட்ட நெல் வயல்களில் காலபோக நெற்செய்கைக்கான விதைப்புவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காலந்தாழ்த்தி மழை பெய்வதால உரிய பயன் பெறமுடியாமல் போய்விடும் என்ற அச்சத்தில் சிலர் நெல் விதைப்பில் ஈடுபடவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதி குடியிருப்புக் காணிகளிலும் மாடுகள் பூட்டி கலப்பையினால் உழவு மேற்கொள்ளப்படுவதைக காணமுடிகிறது. மிதிவெடி மற்றும் வெடிக்காத ஷெல்கள், புதைக்கப்பட்டுள்ள கண்ணிகள் போன்றவை இருக்கலாமென்ற அச்சத்திலேயே விவசாயிகள் இம்முறை மண்வெட்டியால் கொத்துவதை நிறுத்தி மாடுகளால் உழவு மேற்கொண்டு வருகின்றனர் எனக் கூறப்பட்டது. (எ-117)

# ஒருவாரத்தின்பின் அக்கரைப்பற்றில் வழமையான நிலை திரும்பியது;

## உணவுப் பொருள்கள் விலை அதிகரிப்பு!

கொழும்பு,ஒக்.23

அக்கரைப்பற்றுப் பகுதி ஒருவார காலத்திற்குப் பின்னர் நேற்றுமுன்தினம் முதல் வழமைநிலைக்கு திரும்பியது. பாடசாலைகள், அலுவலகங்கள், வங்கிகள் என்பன சுமுகமாக இயங்கின. நீண்டதூர பஸ் சேவைகளும் நடைபெற்றன.

முஸ்லிம் வாலிபர் ஜாவிட் கடத்தல் நாடகத்தை அடுத்து அக்கரைப்பற்றுப் பகுதியில் பெரும் பதற்றத்துக்கு உள்ளாகியது தெரிந்ததே.

அங்கு அமைதியை நிலைநாட்ட கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த அதிரடிப்படையினர், கலகமடக்கும் பொலீஸார், மேலதிக பொலீஸார் ஆகியோர் முகாம்களுக்கு திருப்பியழைக்கப்பட்டனர்.

ஹர்த்தால்களினால் கடைகள் பூட்டப்பட்டு போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டிருந்ததால் உணவுப் பொருள்களின் விலைகள் நேற்றுமுன்தினம் கணிசமான அளவு அதிகரித்திருந்தன. அரிசி, தேங்காய், காய்கறி என்பன கூடுதலான விலைகளில் விற்கப்பட்டன. (ஐ)

# ஒன்றிணைந்து செயல்பட்டு உரிமைகளை வெல்வோம்!

## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவிப்பு

கல்முனை,ஒக்.23

சிறுபான்மை சமூகங்களை தேர்தல் காலங்களில் மட்டும் நாடிவரும் அரசியல் கட்சிகள் ஆட்சிக்கு வந்ததும் சிறுபான்மை சமூகங்களை மறந்து விடுகின்றன. இதுபோன்ற காரணங்களினாலேயே மறுக்கப்பட்ட தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் போன்ற அமைப்புக்கள் உருவாகின.

எனவே, சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளை வழங்குவதற்கு தயங்கக்கூடாது. அதேவேளை, சிறுபான்மை சமூகங்கள் ஒன்றிணைந்து செயல்படுவதன்மூலம் தமது உரிமைகளைப் பெறமுடியும். நாட்டின் தற்போதைய சமாதானத் தீர்வுத் திட்டத்திற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

- இவ்வாறு வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறினார்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் 40ஆவது கிளையை கல்முனை நகரத்திலும் 41ஆவது கிளையை ஏறாவூரிலும் வைபவரீதியாகக் கடந்த 15ஆம் திகதி திறந்து வைத்தார். அதன்பின்பு அங்கு நடைபெற்ற கூட்டங்களில் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

தற்போது நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி செயற்பட்டு வருகின்றார். இங்கு நிரந்தர யுத்தநிறுத்தமும் சமாதானமும் ஏற்படுவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றது.

அதேநேரம், நாங்கள் எங்களுடைய சுயகௌரவத்தை விட்டுகொடுப்பதற்கு ஒருபோதும் தயாராக இல்லை.

சிறுபான்மை மக்கள் இன, மத பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்படவேண்டும். அதன்மூலமே எமது உரிமைகளைப் பெறமுடியும். இந்த அடிப்படையிலேயே எமது மறைந்த தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச்" செய்து கொண்டனர். அதன்படி நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஜும் இணைந்து செயல்பட முடிவெடுத்தன. தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக ஏதாவது பிரச்சினைகள ஏற்படும்போது ஒன்றாக நின்று அவற்றுக்குத் தீர்வு காண்பது, தமது சமூகங்களுக்கான தேவைகளை இணைந்து பெறுவது என்பவையும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளன.

எமது தலைவர் அமரர் தொண்டமான் மறைந்த பின்பு நான் அமைச்சராகப் பதவியேற்று முதன்முதலாக அமைச்சரவைக்குச் சென்றபோது எனக்கு உதவியாக இருந்தவரும் அறிவுரை கூறியவரும் அமரர் அஷ்ரப்தான்.

நான் ஒலுவிலுக்குச் சென்றபோது அவர் செய்துள்ள சேவைகளை அங்கே நேரில் அறிந்து கொண்டேன்.

நமக்குள் ஒற்றுமையும் பலமும் இருந்தால்தான் நாம் எதனையும் பெற்றுக்கொள்ளமுடியும். இதனை மனதில் கொண்டு செயறபடவேண்டும். அதன்மூலமே நமது சமூகங்கள் முன்னேற்றங்காணமுடியும்.

- இவ்வாறு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறினார். (எ)

## புனரமைப்பு வேலைகள் தாமதம்

# சாவகச்சேரி நவீனசந்தையில் ஒழுக்கு பொருள்கள் நனைந்து நாசம்!

தென்மராட்சி,ஒக்.23

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த இருதினங்களாக தொடர்ச்சியாக பெய்யும் மழை காரணமாக நவீன சந்தையில் தற்போது மீள இயங்கத் தொடங்கியுள்ள கடைகளுக்குள் மழை ஒழுகைக்குக் காரணமாக பெறுமதிமிக்க பொருள்கள் நனைந்து பழுதடைவதாக தெரிவிக்கப்பட்டது.

யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்த மேற்படி கடைகளைப் புனரமைப்பதற்கென வடமாகாண புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அதிகாரசபை ஒரு கோடி 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆறு மாதங்களாகியும் இதுவரை வேலைகள் பூர்த்தியடையவில்லை.

மேல்மாடிக் கட்டடத்தில் தேங்கி நிற்கும் மழைநீர் ஒழுகி தரைப்பகுதியில் இயங்கும் கடைகளில் வெள்ளம தேங்கி நிற்பதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர். (எ-117)

## நீண்டகாலமாக

# புனரமைக்கப்படாதுள்ள பண்டத்தரிப்பு வீதிகள்

சண்டிலிப்பாய்,ஒக்.23

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பிரிவைச் சேர்ந்த பல ஒழுங்கைகளும் சிறிய வீதிகளும் நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படவில்லை.

மாரி மழைகாலம் ஆரம்பித்துவிட்டதால் இந்த வீதிகளில் மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாது மிகவும் சிரமப்படுகின்றனர்.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு அம்மன் வீதி, பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் வீதி, பண்டத்தரிப்பு சென்.மேரிஸ் வீதி, பண்டத்தரிப்பு கேணிக்கட்டு ஒழுங்கை மற்றும் பொந்தி ஒழுங்கை ஆகியன உட்பட பல வீதிகள் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் இருந்துவருகின்றன.

மாரி காலத்தில் மழை நீர், வெள்ளம் என்பன தேங்கிநின்று போக்குவரத்திற்கு மிகவும் கஷ்டமானதாக இருக்கும் என்பதால் இவ்வீதிகளை விரைவில் புனரமைத்துத் தருமாறு இங்குள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள், சனசமூக நிலையங்கள் வலி.தென்மேற்கு பிரதேச சபை தலைவரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன. (எ-135)

## அரச வைத்தியசாலைகளில்

# தாதிமார் 8 மணிநேரம் மட்டுமே சேவை!

எதிர்வரும் முதலாந்திகதி முதல் அரசாங்க வைத்தியசாலைகளில் சேவையாற்றும் தாதிமார் 8 மணி நேரம் மட்டுமே சேவையாற்றுவார்கள். இதன்படி அவர்கள் இரவுநேர சேவையில் ஈடுபடமாட்டார்கள்.

கோதாகொட இடைக்கால சம்பள அறிக்கையில், தாதிமார் சம்பளம் தொடர்பாக அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகக் கூறி, 8மணி நேரம் மட்டுமே சேவையாற்றும் தீர்மானத்தை தாதிமார் சங்கம் மேற்கொண்டிருக்கிறது.

ஆரம்பத்தில் கொழும்பிலுள்ள சில அரசாங்க வைத்தியசாலைகளில் இது மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருநெல்வேலி சட்டநாதர் வீதியைச் சேர்ந்த
செல்வி நடராஜசர்மா அனந்தலெட்சுமி
*B.A.(Hons)*



அவர்கள் 13.10.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல சிறப்புக்களைப் பெற வேண்டும் என்று எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
ச.செம்பொற்சோதீஸ்வரன் (சித்தப்பா),
ஆசிச்சித்தி (விமலகுமாரி),
செ.சுரேஷ்குமார் (தம்பி),
செ.ஜெயலக்ஷமி (தங்கை).

*வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடி, கோப்பாய்.* (9786)

## கடை வாடகைக்கு விடப்படும்

நாவலர் தர்மகர்த்தா சபைக்குரிய கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள 323ஆம் இலக்கக் கடை வாடகைக்கு விடப்படவுள்ளது. தேவையானோர் நாவலர் தர்மகர்த்தா சபைச் செயலாளரும், நாவலர் மகா வித்தியாலய அதிபருமாகிய திரு.ந.சிவராஜா அவர்களுடன் தொடர்புகொள்ளவும்.

**ந.சிவராஜா**
செயலாளர், நாவலர் தர்மகர்த்தா சபை. (9779)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள சைனா அல்லர் (Hallar) கிறைன்டர் (அமுதா) என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**குமார் (பிளேட்)**
டச்சு றோட்,
(9791) சாவகச்சேரி.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

மேசன்/தச்சுத் தொழிலாளர் தேவை. அபுதாபியில் உள்ள கம்பனி ஒன்றிற்கு மேற்கூறிய வேலைக்கு ஆள்கள் தேவை. விரும்புவோர் பாஸ்போட் பிரதியுடன் 3 பாஸ்போட் அளவுப் புகைப்படங்களுடன் கீழ்வரும் விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும்.

**திரு.சி.மணியம்,**
*இல.6, யாழ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.* (9799)

## உடன்தொடர்புகொள்ளவும்

ரொயோடா (TOYOTA) வானில் துரித வாகன ஓட்டுநர் பயிற்சி. கொழும்பில் வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் பெற வசதிகளும் செய்துகொடுக்கின்றோம்.

தொடர்பு: 91/10, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம்.

(9784) தொலைபேசி: 0777 - 519981.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
10 - 03 - 1930



மறைவு
23 - 09 - 2002

## அமரர் கந்தன் மாணிக்கம்

*பார்த்தவர்களுக்கெல்லாம் உதவிபுரிந்தீர்களே ஐயா!*
*எமைப் பாதி வழியில் பரிதவிக்கவிட்டு பரமனடி சேர்ந்தீர்களே!*
*பல ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள்*
*எம் நெஞ்சைவிட்டு அகலவே அகலாது ஐயா!!!*

மறைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (23.10.2002) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வுகளில் கலந்து மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உம் நினைவால் வாடும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*தவசிகுளம்,*
*கொடிகாமம்.* (9794)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்
## சலவைச் சேவை - 2003

### சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்.

2003ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள அரசாங்க வைத்திய நிறுவனங்களுக்குச் சலவைச் சேவை வழங்குவதற்கான கேள்விகள் 2002ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்று பி.ப.2.00 மணிக்குத் திறக்கப்படும்.

கேள்விப் பத்திரங்களைப் பெறவிரும்புவோர் மீளளிப்புடனான கேள்விக் கட்டுப் பணத்தையும் உரிய கேள்விப் பத்திரப் பணம் 50/=யும் செலுத்தி 28.11.2002ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் சீல் வைத்த உறையிட்டு கேள்வி விவரம் எழுதப்பட்டு இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

வேறு விவரங்கள் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளமுடியும். நிர்ணயிக்கப்பட்ட வீதங்களுக்கு மேலாகக் கேட்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வைத்திய கலாநிதி
உ.சிவபாதசுந்தரம்,
*மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,*
*சுகாதார சேவைகள்,*
*யாழ்ப்பாணம்.*

*இல.8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,*
*கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-24371)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## சுகாதார சேவைகள் பிரிவு - யாழ்ப்பாணம்

## பால் தவிர்ந்த சமைத்த / உலர் உணவு வழங்கல் - 2003

2003ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த / உலர் உணவு வழங்குவதற்கான கேள்விகள் 29.11.2002 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 2.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புவோர் தமது பெறுமதிச் சான்றிதழும் (Worth Report) எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப உத்தரவாதமுறியும் (Bid Bond) சமர்ப்பித்து கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 100/-உம் அட்டவணையிற் காட்டப்பட்ட மீளளிப்புடனான கேள்விக் கட்டுப்பணமும் செலுத்தி 28.11.2002 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

விவரங்கள் கீழ்க் குறிப்பிடப்படுகின்றன.

### உலர் உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்

| நிறுவனங்கள் | கேள்விப்பிணை | உத்தரவாதமுறி 2 - மாதம் | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| ஆ. வை., பருத்தித்துறை | 3,000/- | 240,000/- | 30,000/- |
| மா. வை., வல்வெட்டித்துறை | 2,000/- | 180,000/- | 20,000/- |
| மா. வை., தெல்லிப்பழை | 2,000/- | 200,000/- | 20,000/- |
| ஆ. வை., நெடுந்தீவு | 2,000/- | 80,000/- | 20,000/- |
| மா. வை., ஊர்காவற்றுறை | 2,000/- | 80,000/- | 20,000/- |
| மா. வை., சாவகச்சேரி | 2,000/- | 25,000/- | 20,000/- |
| சுற்றயல்கூறு, சங்கானை | 1,500/- | 80,000/- | 15,000/- |
| சுற்றயல்கூறு, கோப்பாய் | 1,500/- | 160,000/- | 15,000/- |

### சமைத்த உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்

| நிறுவனங்கள் | கேள்விப்பிணை | உத்தரவாதமுறி 2 - மாதம் | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| சுற்றயல்கூறு, அச்சுவேலி | 1,500/- | 100,000/- | 15,000/- |
| சுற்றயல்கூறு, அனலைதீவு | 1,500/- | 44,000/- | 15,000/- |
| சுற்றயல்கூறு, காரைநகர் | 1,500/- | 40,000/- | 15,000/- |
| சுற்றயல்கூறு, நயினாதீவு | 1,500/- | 42,000/- | 15,000/- |
| கி. வை., வேலணை | 1,500/- | 40,000/- | 15,000/- |
| கி. வை., வட்டுக்கோட்டை | 1,500/- | 40,000/- | 15,000/- |
| ம.ம.ம.ம., கரவெட்டி | 1,000/- | 24,000/- | 15,000/- |
| ம.ம.ம.ம., வரணி | 1,000/- | 36,000/- | 15,000/- |
| ம.ம.ம.ம., மானிப்பாய் | 1,000/- | 36,000/- | 15,000/- |
| ம.ம.ம.ம., கோண்டாவில் | 1,000/- | 35,000/- | 15,000/ |
| ம.ம.ம.ம., அளவெட்டி | 1,000/- | 35,000/- | 15,000/- |
| ம.ம.ம.ம., கொடிகாமம் | 1,000/- | 30,000/- | 15,000/- |

கேள்விகள் இணைப்பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும், இணைப்பிரதி தனியாகவும் சீல் வைத்த உறைகளிலிட்டு கேள்விவிவரம் எழுதப்பட்டு கேள்விப் பெட்டியில் இடப்படல்வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பாகமாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைகளுக்கு மேலாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேலதிக விவரங்களை பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளமுடியும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விக்காரர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ளமுடியும்.

**வைத்திய கலாநிதி உ.சிவபாதசுந்தரம்,**
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

இல.8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (சி24379)




50 இலட்சம் ரூபா
பெறுமதியான வீடு அல்லது பணம்
உங்களுக்கா, எனக்கா?

NSB பரிசுப் பொதி

5 இலட்சம் ரூபா பணப்பரிசு
இவருக்கா
எனக்கா?



மேலும் 5 அதிர்ஷ்டசாலிகளுக்கு பாங்கொக், மலேசியா அல்லது சிங்கப்பூர் சென்று திரும்புவதற்கு ஒவ்வொன்றும் ரூபா 50,000/- பெறுமதியான 5 விமான டிக்கட்டுகள்.

தேசிய சேமிப்பு வங்கியின் ஏதாவதொரு சேமிப்புக் கணக்கில் ஜூலை 01ம் திகதி முதல் டிசெம்பர் 31, 2002 வரை ரூபா. 25,000/- அல்லது அதன் மடங்குகளில் 6 மாதங்களுக்குப் பணத்தை வைப்பிலிட்டுப் பெறுமதிமிக்க பரிசுகளை வெல்லுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள NSB கிளையை நாடவும்
* இது வீட்டின் மாதிரி உருவம் மட்டுமே.

# கந்தரோடை வரலாற்றுச் சின்னங்கள் பற்றி சரியான ஆய்வுகள் அவசியம்!



செய்திக் கட்டுரை

புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து எழுந்துள்ள சூழ்நிலை தென்பகுதி மக்களையும், வெளிநாட்டுப் பயணிகளையும் யாழ்.குடாநாட்டை நோக்கிப் படையெடுக்க வைத்துள்ளது. இப்படையெடுப்பானது நமக்குப் பல அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது.

தென்பகுதிப் பயணிகளின் வருகையில் நாகவிகாரையும் நயினாதீவில் அமைந்துள்ள விகாரையும் முக்கிய பார்வைத் தலங்களாக உள்ளன. அண்மை நாள்களில் அவர்களின் கவனம் கந்தரோடை தொல்பொருள் சின்னங்களிலும் அதிகரித்துள்ளது.

கந்தரோடை வரலாற்றுச் சின்னங்கள் தொடர்பாக அண்மையில் ஒரு தினசரியில் கந்தரோடை பௌத்த தாதுகோபங்களைப் பார்வையிட வருபவர்களுக்கு அடிப்படை வசதிகள் இல்லை என்ற சாரப்பட ஒரு செய்தி வெளியாகி இருந்தது. தென்பகுதி வருகையாளரின் எண்ணப் பாங்கும் அதுவேதான். அவர்கள் - குறிப்பாக அதிகளவில் வரும் பௌத்தபிக்குகள் - அவ்வரலாற்றுச் சின்னங்களை பௌத்த சின்னங்களாக - பௌத்த தாதுகோபங்களாகவே - கருதுகின்றனர்.

நமது கலை, பண்பாடு, வரலாறு தொடர்பான அக்கறைகள் மீண்டும் வெளிப்படுத்தப்படும் இத்தருணத்தில் -

நமது அரும்பொருள்கள் காவு கொள்ளப்படாது காப்பாற்றப்படவேண்டுமென்ற குரல்கள் ஒலிக்கும் இவ்வேளையில் -

கந்தரோடை தொடர்பான நமது கவனத்தைக் குவிக்கவேண்டியது அவசியமாகின்றது.

கந்தரோடை தொடர்பாக மூவேறு தரப்பினர் தத்தம் அடையாளங்களை வெளிக்காட்டும் சின்னங்கள் கந்தரோடையில் இருப்பதாகக் கூறுகின்றனர்.

அவ்வகையில் கந்தரோடையில் வழுக்கியாற்றை ஆதாரமாகக் கொண்ட தமிழர் குடியிருப்பு ஒன்றின் தோற்றத்தை ஒரு சாரார் வலியுறுத்துகின்றனர். கதிரமலை இராச்சியம் நின்று நிலவிய பிரதேசம் கந்தரோடை எனவும், இங்கு உக்கிரசிங்கன் முதலான மன்னர்கள் ஆட்சி செய்தனர் என்றும் சொல்லப்படுகிறது. பிறிதொரு சாரார், கதிரமலை இராச்சியம் இருந்த இடம் சுன்னாகம் சந்திக்குக் கிழக்காக - இப்போது கதிரமலைச் சிவன்கோயில் உள்ள - பிரதேசம் என்று கூறுகின்றனர்.

லிங்கோற்பவர் எனப்படும் வீரசைவர்களின் ஈமத்தாழிகள் புதைக்கப்பட்டு, அங்கு எழுப்பப்பட்ட கல்லறைகளே அவையென இன்னொரு சாரார் வலியுறுத்துகின்றனர்.

அடுத்த சாரார், பௌத்த மதத்தினர். அவ்வகையில் பௌத்தம் நிலவிய இடமாகக் கந்தரோடையைச் சுட்டும் இவர்கள், சிங்கள மக்கள் இங்கு வாழ்ந்ததாக நிறுவ முற்படுகின்றனர். தமிழ் பௌத்தம் இருந்ததற்கான ஆதாரமாக வேறு சிலர் இவற்றை வலியுறுத்துகின்றனர்.

எவ்வாறெனினும், கந்தரோடை வரலாற்றுச் சிறப்புமிக்க இடம். வழுக்கியாறும், குளங்களும், மருத நிலமும், ஆலயங்களின் அரணும்மிக்க குடியிருப்புப் பகுதி. குடியிருப்புகளோடு இணைந்ததாக இவ்வரலாற்றுச் சின்னங்கள் காணப்படுகின்றன.

இவ்வரலாற்றுச் சின்னங்கள் காணப்படும் காணி தியகராசபிள்ளை சிவகுருநாதன் என்பவருக்குச் சொந்தமாக இருந்தது. இக்காணியின் பெயர் கயற்கண்ணி சித்தியார் வளவு என்றும் அழைக்கப்பட்டது.

கந்தரோடை தொல்பொருள் சின்னங்கள் தொடர்பில் அக்கறை கொண்டவரும், இச்சின்னங்கள் பரவிக் கிடக்கும் காணிகளுடன் தொடர்புடையவருமான அ.தற்பரானந்தன் கூறும்போது -

"கந்தரோடையில் தொல்பொருள்கள் தொடர்பான ஆய்வை மேற்கொண்டு, அது தொடர்பான விவரங்களை முதலில் வெளியிட்டவர் போல் பீரிஸ் ஆவார். அவர் அடிக்கடி கந்தரோடைக்கு வந்து தொல்பொருள்களைச் சேகரித்துச் சென்றுள்ளார். அவர்தான் கந்தரோடையின் தொன்மையை முதன்முதலில் வெளிப்படுத்தினார். தொல்பொருள்கள் தொடர்பில் அப்பகுதி மக்கள் அக்கறை காட்டாத சூழலில், முஸ்லிம் வியாபாரிகள் பலரும் வந்து பழைய நாணயங்கள், முத்துக்கள் போன்றவற்றைச் சேகரித்துச் சென்றனர். அவ்வேளையில் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் ஆசிரியராக இருந்த சி. பொன்னம்பலம் (ஆதவன்) தொல்பொருள்கள் கந்தரோடையை விட்டு வெளிச் செல்லக்கூடாது என்ற மனப்பாங்குடன், தனது மாணவர்களைப் பயன்படுத்தி, சேகரித்து வைத்திருந்தார்" - என்றார்.



அமெரிக்காவின் பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த் செல்வி விமலா பெக்லி தலைமையிலான குழுவொன்று கந்தரோடையில் மேற்கொண்ட ஆய்வில் பானை ஓடு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. சி.மு.அப்புத்துரை என்பவருக்குச் சொந்தமான பொரிக்கண்புலம் என்ற காணியிலிருந்து எடுக்கப்பட்ட இப்பானை ஓட்டில் பிராமி எழுத்துக்கள் காணப்பட்டன. இது கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

போல் பீரிஸ் முதலானோர் கந்தரோடையின் தொன்மையை எடுத்துரைத்ததைத் தொடர்ந்து, 1952ஆம் ஆண்டு தொல்பொருள் திணைக்களம் தி.சிவகுருநாதனிடமிருந்து கயற்கண்ணி காணியை வாங்கியது. அதனைத் தொடர்ந்து 1960, 1962, 1964ஆம் ஆண்டுகளில் புதைபொருள் ஆய்வுகளை மேற்படி திணைக்களம் மேற்கொண்டது. இவ்வாய்வுகள் நில மட்டத்திலிருந்து இரண்டு அடி ஆழத்துக்கு மாத்திரமே இடம்பெற்றன. இவ்வாய்வில் முருகைக் கற்களிலான வட்டவடிவ அத்திபாரங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றைச் சூழ்ந்து ஒரு பெரிய அத்திபாரமும் காணப்பட்டது.

புதைபொருள் ஆய்வுத் திணைக்களம் தனது ஆய்வுகளைத் தொடராமல் - 2 அடி ஆழத்துடனேயே - நிறுத்திக்கொண்டது. அது மட்டுமல்லாது கண்டுபிடிக்கப்பட்ட அத்திபாரங்களில் மேல் கண்ட கற்களை நிரப்பி, வைரமான கொங்கிறீட் இட்டு, தாதுகோப வடிவ அமைப்புக்களை உருவாக்கியது. பழமையைக் காண்பிக்க மூன்று விரல்களைக் குத்தி அடையாளங்களும் இடப்பட்டன. நாம் தற்போது காணுகின்ற இந்த அமைப்பு புதைபொருள் ஆய்வுத் திணைக்களத்தால் உருவாக்கப்பட்ட செயற்கை அமைப்புத்தான்.

1970களின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத் தொல்பொருள் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் வி.சிவசாமி, அ.தற்பரானந்தன், ஆ.சிவநேசச்செல்வன் முதலான பலர் அங்கம் வகித்த இக்கழகம் யாழ்ப்பாணத்தின் தொல்பொருள்கள் தொடர்பாகவும், யாழ். பொது நூலகத்தில் 10 தினங்கள் இது தொடர்பான கருத்தரங்கு ஒன்றையும் நடத்தியது. இக்கழகத்தின் தோற்றம் கந்தரோடையில் புதைபொருள் ஆய்வுத் திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குச் சவாலக அமைந்தது. அதுமட்டுமன்றி 1974ஆம் ஆண்டு உடுவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வி. தர்மலிங்கம் கந்தரோடை அகழ்வாய்வுகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தார்.

அப்போதைய அரசமைப்பு விவகார அமைச்சராக இருந்த கொல்வின் ஆர்.டி.சில்வாவை விளித்து, 'நீர் ஒரு வரலாற்று ஆசிரியர். முழுமையாக ஆய்வு செய்யாமல், சரியான உண்மை வரலாற்றினை ஆராயாமல் தாதுகோப அமைப்புக்களைக் கட்டுவது தவறானது. அதை உடனடியாக நிறுத்தி, மேலும் ஆய்வுகளைச் செய்யவேண்டும்' என்று வேண்டினார் தருமர். அதை ஏற்றுக்கொண்ட கொல்வின் ஆர்.டி.சில்வா கந்தரோடைக்கு நேரில் விஜயம் செய்து, நிலைமைகளைப் பார்வையிட்டு, தொல்பொருள் திணைக்கள வேலைகளை நிறுத்துவித்தார். அதன்பின் திணைக்களம் எவ்வகையான ஆயவுகளையும் இங்கு மேற்கொள்ளவில்லை.

எனினும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து கலாநிதி ரகுபதி, செ.கிருஷ்ணராசா முதலானோர் இப்பகுதியில் கள ஆய்வுகளை மேற்கொண்டனர். இவர்களது ஆய்வின் பெறுபேறாக கி.மு.2ஆம் நூற்றாண்டு கால தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன்மூலம் கி.மு.2ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் வரை பூர்வீகக் குடிகளாகத் தமிழர்கள் வாழ்ந்தது நிரூபிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது பண்டைத் தமிழர் தாழி அடக்கத்தைப் பறைசாற்றும் சான்றுகள் சிலவும் இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. சீன நாணயம், ரோம நாணயம், டச்சு நாணயம், சேது நாணயம், லக்சுமி நாணயம் முதலான பலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**எஸ்.ஸ்ரீகுமரன்**
(சுன்னாகம் செய்தியாளர்)

தமிழர் தொன்மையைப் பறைசாற்றும் கந்தரோடை பௌத்த தாதுகோபங்களானதன் பின்னணி அரசின் திட்டமிட்ட செயற்பாட்டினாலேயே ஏற்பட்டது. இன்றைய சிங்கள, பௌத்த மக்களின் வருகைக்கான - வரலாற்றுத் தேடலுக்கான - பாதையை, 1960களில் அரச தொல்பொருள் திணைக்களம் ஏற்படுத்தியிருக்கிறது.

எனவே, கந்தரோடை தொடர்பாக, அதன் தொன்மை வரலாறு தொடர்பாக, மேலும் ஆய்வுகளைச் செய்து தமிழர் பூர்வீகத்தை வெளிப்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும். கந்தரோடையின் வரலாற்றுப் பெறுமானம் சிதைக்கப்படாது பாதுகாக்கப்படவேண்டும் என்பது இப்பகுதி மக்களின் பெருவிருப்பாக உள்ளது. ☆

**யாழ்.குடாநாட்டை விட்டு அரும்பொருள்கள் வெளிச்செல்வது குறித்து அண்மைய நாள்களில் கவனம் செலுத்தப்படுகிறது. கந்தரோடை வரலாற்றுச் சின்னங்கள் பலவும் கூட இவ்வாறு தாரை வார்த்துக்கொடுக்கப்பட்ட கைங்கரியமும் நடந்தேறியிருக்கிறது.**

**ஆதவன் பொன்னம்பலம் ஆசிரியர், கந்தரோடை தொடர்பான தொல்பொருள் சான்றுகள் பலவற்றைச் சேர்த்து வைத்திருந்தார் என்பதைக் கட்டுரையில் பார்த்தோமல்லவா? அவர் யாழ்ப்பாண அரச அதிபராக இருந்த பேணன் அபயசேகர என்பவருக்குத் தமிழ் கற்பிக்கும் பணியை மேற்கொண்டிருந்தார். அவ்வேளையில் அரச அதிபர் வேண்டியதன் பிரகாரம் தன்னிடமிருந்த அரும்பொருள்களை - வரலாற்று ஆதாரங்களை - அவர் கையளித்தார். அவை வித்தியோதய/வித்தியலங்கார பல்கலைக்கழகத்துக்கு அரச அதிபரால் கையளிக்கப்பட்டன. பௌத்த பிக்குகள் பலரது வருகைக்கு அத்தொல்பொருள் சான்றுகள்தான் காரணமோ?**

---

# விழிப்புலனற்றோர் நலன் பேண ஆக்கபூர்வ நடவடிக்கை தேவை

## 'வாழ்வகம்' கலைவிழாவில் துணைவேந்தர்

வலிகாமம் தெற்கு,ஒக்.23

விழிப்புலனற்றோரின் நலன்களைக் கவனிப்பது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.

சுன்னாகம் விழிப்புலவலுவிழந்தோர் இல்லம் (வாழ்வகம்) ஏற்பாடு செய்த சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின கலைவிழா அண்மையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

துணைவேந்தர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாடுகளில் விழிப்புல வலுவிழந்தோரை சமூகத்தின் ஒரு சுமையாக - சமூகத்தின் ஒரு குறையாக - கருதாமல் அவர்களுக்கு நல்ல வாழ்வையும், பிறருக்கு அவர்கள் பல உதவிகளைச் செய்யக்கூடியவர்களாகவும் உருவாக்கியுள்ளனர்.

இங்கிலாந்தின் முன்னாள் கல்வி அமைச்சராகவும், தற்போதைய உள்நாட்டு அமைச்சராகவும் விளங்குபவர் ஒரு விழிப்புல வலுவிழந்தவர். இவரை முன்னுதாரணமாகக் கொண்டு எமது நாட்டில் உள்ள கண்பார்வையற்றவர்களையும் உயர் நிலைக்கு கொண்டுவர நாம் முயற்சிக்க வேண்டும்.

வாழ்வகத்தின் செயற்பாடுகளை அறியாமல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல கண்பார்வையற்ற சிறுவர்கள் உள்ளனர். இங்குள்ள 14 பிரதேச செயலகங்கள் மூலம் இவ்வாறான பிள்ளைகளை இனங்கண்டு, அவர்களை வாழ்வகத்தில் சேர்த்து உயர் நிலை அடையச்செய்யவேண்டும்.

உதவிபுரியும் சமூக அமைப்புக்களிடையே வாழ்வகம் ஒரு வலைப்பின்னலை ஏற்படுத்தித் தம்மை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

வாழ்வகம் நிலைத்து நின்று செயற்பட நல்ல சிந்தனையுடைய, அர்ப்பணிப்பு மனம்கொண்டவர்கள் அவசியம் தேவை.

விழிப்புலவலுவிழந்தோருக்கு உதவிகள் வழங்குவதற்கென வெளிநாட்டு நிறுவனங்கள், சமூக சேவைத் திணைக்களம், வெளிநாட்டில் வாழும் நம்மவர்கள் எனப்பலரும் காத்திருக்கின்றனர். எனவே, வாழ்வகத்தினர் வெளியுலகத் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்கள்மூலம் பயன் பெற முயற்சிக்கவேண்டும் - என்றார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன், யூனியன் கல்லூரி அதிபர் சு.புண்ணியசீலன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

வாழ்வக பிள்ளைகளின் நடனம், கோலாட்டம், கும்மி, தாளலயம், அபிநயப் பாடல், இசை போன்ற கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

(எ-152)

---

## மீள்குடியமர்வுக் கொடுப்பனவில்

# 2000ஆண்டு இடம்பெயர்ந்தவர்களையும் கருத்தில்கொள்ளுமாறு பணிப்பு

வலி.வடக்கு,ஒக்.23

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்குவதில் 2000ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்த மக்களையும் கருத்திற்கொள்ளும்படி பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி தென்மராட்சி, நல்லூர், யாழ்ப்பாணம், மருதங்கேணி ஆகிய பிரதேசசெயலர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்களையும் ஏ-9 கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர் வந்தவர்களுக்கான மீள்குடியமர்வுக் கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் இணைத்துக்கொள்ளும்படி கிராம அலுவலர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் மேற்படி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு பிரதேச செயலகம், அரசியல் கட்சி அலுவலகம் ஆகியவற்றில் வைத்து 2 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(எ-86)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நாளைமறுதினம் பி.ப.5.30 மணிக்கு 'கைநழுவிப் போகின்ற சைவப் பண்பாட்டு விழுமியங்கள்' என்ற விடயம் குறித்து சைவப்புலவர் சு.செல்லத்துரை சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

## உயர்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டிருக்கிறது.

அரசமைப்புச் சபை உறுப்பினர்களுக்கு அதிகாரம் வழங்கும் நடைமுறை செயற்படுத்தமுடியாததாகும். அதனை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் பெறப்படவேண்டும். அரசமைப்புச் சபை உறுப்பினர்களை உயர் நீதிமன்றத்துக்கு கட்டுப்படுத்த முடியாது என்ற தன்மையை அனுமதிக்க இயலாது எனவும் உயர்நீதிமன்றம் தீர்ப்பில் கூறியிருக்கின்றது. (ம)

# சர்வதேச விண்வெளி...

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

கித் தவிக்கும் ரஷ்யா இந்த சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு உல்லாசப் பயணிகளை அழைத்துச சென்று பணம் சம்பாதிக்கும் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் அடிப்படையில் ஏற்கனவே இரு விண்வெளி சுற்றுலாப் பயணிகள் (டெனிஸ் டிட்டோ, ஷட்டில் ஓர்த்) விண்ணுக்குச் சென்று வந்துள்ளனர். அடுத்ததாக விண்ணுக்கு சுற்றுப் பயணம் செய்வதற்கு அமெரிக்க பொப் இசைப் பாடகர் ஒருவர் ரஷ்யாவில் பயிற்சி பெற்று வருகின்றார். விண்ணுக்கு சுற்றுலாப் பயணிகளைக் கொண்டுசெல்லும் இந்தத் திட்டத்தில் அமெரிக்காவும் விரைவில் இணைந்து கொள்ள உள்ளது. அதற்கான ஏற்பாடுகளை அது விரைவாகச் செய்துவருகின்றது.

விண்வெளி ஆய்வுகள் பற்றி விஞ்ஞானமும் அறிவியலும் வளர்ந்த பின்பே சிந்திக்கப்பட்டு வருவதாக நாம் நினைத்தாலும் அதற்கு முன்பே நம் முன்னோர்கள் இது பற்றியெல்லாம் சிந்தித்திருக்கிறார்கள் என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் சான்றுகளுடன் நிரூபிக்கின்றார்கள்.

அவர்களின் கூற்றுப்படி சுமார் 3600 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே விண்வெளி ஆராய்ச்சி பற்றி சிந்திக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு ஆதாரமான செப்புத் தகடு ஒன்று அண்மையில் ஜேர்மனியின் மேற்கு பெர்லின் நகரில் உள்ள நெப்ரா என்ற இடத்தில் கிடைத்தது.

மனித இனத்தின் பரிணாம வளர்ச்சியில் ஆரம்ப காலம் கற்காலமாகக் கருதப்படுகின்றது. அதாவது இந்தக் காலகட்டத்தில் மனிதன் கற்களையே ஆயுதமாகப் பயன்படுத்தி வந்தான். பின்னர் உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதை தாமிர காலம் என்று அழைக்கப்பட்டது. அந்தக் கால கட்டத்துக்குரியதான செப்புத் தகடே இப்போது கிடைத்துள்ளது. சூரியன், சந்திரன் மற்றும் நடசத்திரங்கள் பற்றிய வரைபடம் இந்த செப்புத் தகட்டில் தங்கத்தில் பதிக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இந்தத் தகடு தற்போது ஜேர்மனியின் அரச அரும்பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதன் விண்வெளி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தான் என்பதற்கு இந்த செப்புத் தகடு உறுதியான ஆதாரம் என்று வரலாற்று ஆயவாளர்கள் கூறுகின்றார்கள்.

# 'கிபிர்' ஜெட்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ரக விமானத்தின் தொழில்நுட்பப்படி, இவ்வாறான ஒரு சந்தர்ப்பங்களில் விமானி சுயமாகவே விமானத்திலிருந்து வெளியே தள்ளப்படுவார். அவா உடனே 'பரசூட்' மூலம் தரையில் இறங்குவார்.

நேற்றைய விபத்தின்போது விமானி வெளியே தள்ளப்பட்டு, பரசூட் மூலம் தரையில் இறங்கி உயிர் தப்பினார். அவருக்கு சிறுகாயங்கள் மட்டுமே ஏற்பட்டன.

இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட இந்த விமானம் 10 ஆயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்தபொழுதே இயந்திரக் கோளாறு ஏற்பட்டிருக்கிறது. விமானம் தரையில் விழுந்தபொழுது தீப்பிடித்துக்கொண்டது. தீயை அணைக்க கட்டுநாயக்காவில் இருந்து விமானப் படைத தீயணைப்பு பிரிவினர் விரைந்தனர்.

காயமுற்ற விமானியை அப்பிரதேச மக்கள் கட்டுபொத்த வைத்தியசாலைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனர். பின்னர் அங்கு விரைந்த விமானப்படை ஹெலிகொப்டர், அவரை அங்கிருந்து கட்டுநாயக்கா விமானப்படை முகாமுக்குக் கூட்டி வந்தது. (ம)

## சமாதான...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைவிட்டு விடவில்லை கைவிடப் போவதுமில்லை.

கட்சியின் சிரேஷ்ட சட்ட வல்லுநர்கள், அடுத்த கட்ட நடவடிக்கைகள குறித்து ஆராய்ந்து வருகிறார்கள். சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையுடன் எமது அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொள்வோம்.

நாம் செல்லும் பாதையில் எதிர்ப்படும் எந்த சவால்களுக்கும் முகங்கொடுக்கத் தயார்.

- இவ்வாறு பிரதமர் கூறினார்.(ம)


## புங்குடுதீவு - நயினாதீவு
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து
## சகல வாக்காளர்களுக்கும்

05.10.2002ஆம் திகதி நிறைவெண் இல்லாது ஒத்திவைக்கப்பட்ட கிளைகள் 19இற்கும், 13இற்கும் உரிய கிளைக்குழுத் தேர்தல் 27.10.2002ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நயினாதீவு கிளை இல.19இலும், புங்குடுதீவு தலைமைக் காரியாலயத்திலும் நடைபெறும். சகல வாக்காளர்களும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

க.இராஜரெட்ணம் — தலைவர் (C-24379) செ.எ.செல்வவதனா — செயலாளர்.

வெளிவந்துவிட்டது
## மெய்யியல் நோக்கு

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் மெய்யியல் துறையின் அரையாண்டு சஞ்சிகை கிடைக்குமிடங்கள்.

1.பூபாலசிங்கம் புத்தகசாலை
2.ஸ்ரீ லங்கா புத்தகசாலை } யாழ்ப்பாணம்.
3.புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, கொழும்புத்துறை.

உண்மையை அறிந்துணர
*வாங்குவீர்! பயனடைவீர்!*

(9806)

## இதய அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் சி.மங்களேஸ்வரி அவர்களின் அன்புத் தந்தையார்

### சண்முகம்பிள்ளை கனகசபாபதிப்பிள்ளை

அவர்கள் 21.10.2002 அன்று சிவபதம் அடைந்தமையால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன், அவர் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், வலி.வடக்கு.

(9797)

## மிதிவெடி அகற்றப்பட்ட நிலத்தைக் கையளிக்கும் வைபவம்

அன்புடையீர்!

நாளை (24.10.2002) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் நடைபெறும் இந்த வைபவத்தில் ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் மற்றும் பெரியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு: யாழ்.செயலகத்தில் அமைந்துள்ள மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்துடன் தயவு செய்து நேரிலோ, தொலைபேசிமூலமோ தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இல: 021-222 3886.

மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.

(C/24377)

## தவறிவிட்டது

திரு.ம.இக்னேசியஸ் ஆகிய எனது பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு தராதரப்பத்திரங்களை 14.10.2002 அன்று தவறவிட்டுள்ளேன். தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 33, கண்டி வீதி, சுண்டுக்குளி எனும் முகவரியில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(C-24380)

**ராஜா** யாழ்ப்பாணம்.

விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த

**யூத்** (ரீலஸ்)

காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)

(C-24275)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விக்ரம், கிரன், மனோரமா நடித்த

**ஜெமினி** (ரீலஸ்)

காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

நாளைமுதல் **ஸ்ரீ**

(C-24290)

**நாகம்ஸ்** சுன்னாகம்

சரத்குமார், றோஜா, மணிவண்ணன், வடிவேல் நடித்த

**சின்னத்துரை** (ரீலஸ்)

காட்சிகள் தினசரி : 11.00, 3.00 (பு.நே.)

(9801)

## ரஷ்யாவில் மருத்துவக் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற லுமும்பா பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்வி பயில அனுமதி பெற்றுத் தரப்படும்.

இறுதிச் சந்தர்ப்பம் உடன் சந்திக்கவும்.

*காலை*
முத்துப்பிள்ளையார் கோயிலடி,
ஆனைக்கோட்டை.

*மாலை*
யாழ். வீதி, மானிப்பாய்,
Dr.க.சிவனடியார்.

(9800)


# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் வெற்றிவேலு

ஊர்காவற்றுறை, புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வெற்றிவேலு நேற்று (22.10.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ஸ்ரீமாவதியின் அன்புக்கணவரும், பாலகணவதியின் மைத்துனரும், ஞானசேகரம், ஞானசம்பந்தர், காலஞ்சென்ற ஞானமலர் மற்றும் ஞானசோதி (விஸ்வமடு), காலஞ்சென்றவர்களான ஞானரூபன், சுதன மற்றும் வசந்தி (யாழ்ப்பாணம்), ஜெகன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், சுகிர்தா, லோகேஸ்வரி, யோகராஜா, தவபாலன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2002) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12மணியளவில் புளியங்கூடல் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புளியங்கூடல் தெற்கு,*
*ஊர்காவற்றுறை.* (9810)

தகவல்: வெ.ஞானசம்பந்தர் (மகன்)

## கந்தையா சிறீஸ்கந்தராசா

காழும்புத்துறையைச் சேர்ந்த க.சிறீஸ்கந்தராசா நேற்று (22.10.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் நாகேஸ்வரி (கனடா) தம்பதிகளின் அன்பு மகனும், சற்குணமலரின் அன்புக்கணவரும் விஜேந்தினி (வேம்படி மகளிர் கல்லூரி), கஜேந்தன் (துரையப்பா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், ஸ்ரீசற்குணராசா (கனடா), ஸ்ரீவிக்னேஸ்வரராசா (கிராமசேவையாளர், கோவிலாக்கண்டி), திருமதி ஸ்ரீவசந்தக்கா விஜயகுமார், திருமதி ஸ்ரீவிஜயகுமாரி கமலநாதன், திருமதி ஸ்ரீஇராசகுமாரி இராசலிங்கம், திருமதி அமிர்தா இலங்கேஸ்வரன் (ஜேர்மனி), கலைச்செல்வி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சோமசுந்தரம் - காலஞ்சென்ற கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும், அமரர் யோகசுந்தரம், திருமதி ஞானாம்பிகை கமலநாதன், சந்திரசேகரம் (லெபனான்), அமரர் கமலநாதன், மோகனமூர்த்தி, சிவசுந்தரம் (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2002) புதன்கிழமை 4ஆம் குறுக்கு வீதி, கொழும்புத்துறையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00மணியளவில் துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

*4ஆம் குறுக்கு வீதி,*
*காழும்புத்துறை.* (9808)

தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி ஆச்சிப்பிள்ளை சின்னையா

சுஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆச்சிப்பிள்ளை சின்னையா நேற்று (22.10.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், நீலாவதி, திருநீலகண்டன், கனகபூசணி, திருஞானசம்பந்தர் (கல்கி சன்ஸ்), பாக்கியலச்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பரமநாதபிள்ளை மற்றும் சிவானந்தவதி, பாலசிங்கம் (பாற்பண்ணை, இணுவில்), மணிவதனம் (ஆசிரியை, உயரப்புலம் மெ.த.க.பாடசாலை), சண்முகராசா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், சுகந்தி (ஆசிரியை, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), சிறிகரன் (சமுர்த்தி உத்தியோகத்தர்), சுமாலினி (M.L.T., போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), கருணாகரன் (G.T.Z), சுதர்சன், சுபாஸ்கரன், சுபாசினி, தாரணி, சர்வேந்திரா (லண்டன்), ரவிசாந்தி, யஜீவா, அபர்ணா, மயூரா (கொழும்பு), அனித்தா, ரவிகிருஷ்ணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஸ்ரீசங்கர், அருணன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*சுஞ்சடி,*
*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.* (9813)

தகவல்: குடும்பத்தினர்.


## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை
## கேள்வி அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கு I.C.T.A.D.(இக்ராட்) பதிவுப் புத்தகம் உள்ளவர்களிடமிருந்தும் அனுமதிக்கப்பட்ட உள்ளூர் பொது நிறுவனங்களிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் 06.11.2002 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். *அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.*

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு *"தலைவர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பழைய ஆஸ்பத்திரி வீதி, நெல்லியடி, கரவெட்டி."* என்ற முகவரிக்கு எதிர்வரும் 06.11.2002ஆம் திகதி நண்பகல் 12.00மணிக்கு முன்னர் நேரடியாகவோ, தபால் மூலமோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

கேள்விக்கான கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் | பெறுமதி சேர் வரி (20%) |
|---|---|---|---|
| 01. சந்தைக்கடைத் தொகுதியும் மேல்மாடிக் கட்டடமும் புனரமைத்தல். | 16750.00 | 1000.00 | 200.00 |
| 02.பளை மத்திய சந்தை மீன் சந்தைக் கொட்டகை புனரமைப்பு | 3250.00 | 500.00 | 100.00 |

மேற்குறிப்பிட்ட மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணத்தினையும் மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் பேரில் 04.11.2002 ஆம் திகதி ந.ப. 12.00 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வே.நவரத்தினம்
ஜே.பி.யு.எம்.
தலைவர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை.

*பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,*
*பளை.*
*22.10.2002.* (C/24378)

# இலங்கை சமாதான முயற்சிகள் தோல்வியடைய வாய்ப்பேயில்லை!

## செய்தியாளர்களிடம் அடித்துக் கூறினார் சொல்ஹெய்ம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

இலங்கை இன விவகாரம் சர்வதேச மயப்படுத்தப்பட்டு சர்வதேச நாடுகளும் சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்குவதால் இந்த முயற்சிகள் தோல்வியடைய வாய்ப்புக் குறைவு.

நோர்வே சமாதானக் குழுவின் விசேட ஆலோசகர் சொல்ஹெய்ம் இவ்வாறு உறுதிபட நம்பிக்கை தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர் யாழ்.செயலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றினார்.

நோர்வேயின் ஏற்பாட்டில் இடம் பெற்ற - மத்திய கிழக்கு பிரச்சினை தொடர்பான - பேச்சுக்கள் தோல்வியடைந்தது போன்று தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளும் தோல்வியில் முடிய வாய்ப்பு உண்டா என செய்தியாளர் ஒருவர் அவரிடம் கேள்வி எழுப்பினார்.

அவர் அதற்குப் பதிலளித்துக் கூறியதாவது:-

இலங்கை விவகாரம் சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், ஜபபான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவு வழங்குகின்றன.

மத்திய கிழக்கு பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளுக்கு மத்திய கிழக்குக்குள் உள்ள நாடுகள் மட்டுமே ஆதரவு வழங்கின. சர்வதேசத்தின் ஆதரவு அதற்குக் கிடைக்கவில்லை.

இலங்கை விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள ஒரு தரப்பான விடுதலைப் புலிகள் ஓர் இலக்குடன் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். அவர்கள் சார்ந்த மக்களுக்காக அவர்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர். அந்த அமைப்புச் சார்ந்த மக்களுக்கு தீர்வு ஒன்றை பெறும் நோக்குடன் செயற்படும் விடுதலைப் புலிகளுக்கு மக்கள் ஏற்கக் கூடிய கௌரவமான தீர்வு ஒன்று வழங்கப்பட்டால் பிரச்சினைக்கு முடிவு கிட்டி விடும். இந்த வகையில் தீர்வு ஒன்றை எட்டுவதற்கான முயற்சிகளையே மேற்கொண்டுள்ளோம். அந்த முடிவை எட்டக் காலம் செல்லுமாயினும் நிச்சயம் தீர்வைக் காணக் கூடிய சாத்தியம் உள்ளது - என்றார் அவர். (ஐ-3)

# நேற்றைய இறுதிநாள் நிகழ்வில் முற்றவெளியில் மரம் நடுகை!

யாழ்ப்பாணம்,ஒக்.23

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் 'நிதர்சனம்' நிறுவனத்துடனும் தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து நடத்திய 'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002' இன் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று மிகவும் கோலாகலமாக நடைபெற்றன.

அமைச்சர் பெ.சந்திரசேகரனும் விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் இரா.திருமாவளவனும் சிறப்புரையாற்றினர்.

அமைச்சர் சந்திரசேகரனுடன் மலையக தமிழ் தேசிய இளைஞர் ஒன்றியத்தைச் சேர்ந்த சுமார் நூறு இளைஞர்களும் நிகழ்வுக்கு வந்திருந்தனர். முன்னதாக நேற்றுக் காலை 9 மணிக்கு சுடரேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் -

வரவேற்புரையை 'நிதர்சனம்' பொறுப்பாளர் சேரலாதன் நிகழ்த்தினார். சிறப்புரையை 'சர்வதேச அரசியலும் சிங்கள உயர் குழாமும்' என்ற தலைப்பில் மு.திருநாவுக்கரசு உரையாற்றினார். காலை 10மணிக்கு 'கா[illegible]பியக் கலைகள்' என்னும் தலைப்பில் முதலாவது அமர்வு ஆரம்பமானது. ரமணி தலைமையில் நடைபெற்ற அந்த அமர்வில் பா.அகிலன், ப.புஸ்பரட்ணம் ஆகியோர் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். இவற்றுக்கு கோபாலி, சனாதனன் ஆகியோர் குறிப்புரைகளை வழங்கினர்.

மதிய உணவு இடைவேளையின் போது இந்த மாநாட்டின் நினைவாக வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக உள்ள வெளியில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

நாட்டுபற்றாளர் இராசலிங்கத்தின் மனைவி இ.வள்ளியம்மை முதலாவது மரத்தை நட்டுவைத்தார். அவரைத் தொடர்ந்து 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த மஞ்சுள வெடிவர்த்தனே, மன்னார் மாவட்ட கலைஞர் செபஸ்ரியான் செபமாலை, அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் ஏ.எல்.எம். சலீம், யாழ்.வீரசிங்கம் மண்டப முகாமையாளர் சு.சிவசுப்பிரமணியம் ஆகியோர் மரங்களை நட்டனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற 'ஊடகம்' தொடர்பான அரங்குக்கு விரி. தமிழ்மாறன் தலைமை தாங்கினார்.

ஆ.சிவநேசச்செல்வன், பா.சிவகுமார், றோகிதபாஷன அபேவர்த்தன, மஞ்சுள வெடிவர்த்னே, அமரதாஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர். இந்த அமர்வில் எஸ்.எம்.கோபாலரத்தினம், சி.ரகுராம் ஆகியோர் குறிப்புரை வழங்கினர்.

தொடர்ந்து அமைச்சர் பெ.சந்திரசேகரன், விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் இரா.திருமாவளவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நிறைவுரையை விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

கலை நிகழ்வாக மட்டக்களப்பு சீலாமுனை கலைக்கழகம் வழங்கிய "அருச்சுனன் பெற்ற பாசுபதம்" என்ற வடமோடிக்கூத்து இடம்பெற்றது. (ஐ-4)

## நாட்டின் அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிற்பதைக் காண்கிறேன்.

இந்த நகரில் கண்டிப்பான போக்கைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்த இரு தரப்புக்கள் இன்று ஒன்று சேர்ந்து ஒரு மேசையில் இருந்து பேசும் அளவுக்கு நிலைமைகள் மாறியுள்ளன. இரு தரப்பினரும் சமாதானத்துக்காக கடுமையாகச் செயற்படுகின்றனர்.

இரு தரப்பின் தலைவர்களும் சமாதானப் பேச்சுக்களை நடத்தும் அதேசமயம், பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட மக்களின் மன உணர்வுகளையும் அறிய விரும்பினோம். கடந்த தடவை வந்தபோது மட்டக்களப்புக்குச் சென்றோம். இம்முறை யாழ்ப்பாணம் வந்துள்ளோம். அடுத்த தடவை மலையகத்துக்குச் செல்லவிருக்கின்றோம். அதே நேரத்தில் சிங்கள பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி வருகின்றோம்.

தாய்லாந்தில் நடந்த முதலாம் கட்டப் பேச்சுக்களின்போது அரசுப் பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் இணக்கம் கண்ட கூட்டுச் செயலணியை அமைக்கும் பணியை மேற்கொண்டுள்ளோம்.

வடக்கு - கிழக்கில் உள்ள மக்களுக்கு அவசர புனர்வாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. இதற்காகவே கூட்டுச் செயலணியை விரைவாக அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்த செயலணி மூலம் கண்ணி அகற்றல், மீள் குடியமரும் மக்களுக்கு கல்வி, சுகாதார மற்றும் அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்படும். கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையும் இச்செயலணி கையாளும்.

வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு எட்டப்பட்ட பின்னரே அபிவிருத்தி, புனர்வாழ்வுப் பணிகளுக்கு உதவிகள் வழங்க முடியும் என்று சர்வதேச நாடுகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், அமையவிருக்கும் செயலணியில் அங்கம் வகிக்கும் இருதரப்புக்களின் பிரதிநிதிகளும் கூட்டாக சர்வதேச நாடுகளிடம் நிதி உதவியைக் கோரவுள்ளனர். இதற்காக விரைவில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் சமுகமளிக்கும் மாநாடு ஒன்றைக் கூட்டுவது தொடர்பாக இரு தரப்புக்களின் தலைவர்களுடன் பேசவிருக்கின்றோம்.

இந்த செயலணிக்குப் புறம்பாக அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக ஆராய செயலணி ஒன்றும் அமைக்கப்படவிருக்கின்றது. இரு தரப்புக்களின் பிரதிநிதிகள் இந்தச் செயலணியில் இடம்பெறுவர். எவ்வாறு இந்தப் பிரச்சினையைக் கையாள்வது என்பது குறித்து அவர்கள் ஆராய்வர்.

இலங்கை விவகாரத்தில் அனுசரணையாளராகச் செயற்படும்படி இரு தரப்பினரும் விடுத்த கோரிக்கையின் பேரிலேயே நோர்வே இதில் தலையிட்டது. எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் இரு தரப்புக்களுடனும் பேசி முடிவுகளை எடுப்போம். கிழக்கில் முஸ்லிம்களின் பிரச்சினையில் நேரடியாக நாம் சம்பந்தப்பட முடியாது.

அரசு - புலிகள் - முஸ்லிம்கள் என்ற மூன்று தரப்புக்களும் சேர்ந்து கூடியே அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக பிரதமருடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடினேன். இன்று புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கும் போதும் கலந்துரையாடவிருக்கிறேன்.

அண்மைக்காலச் சம்பவங்களோ, கொழும்பில் நிலவும் அரசியல் ஸ்திரமற்ற தன்மையோ சமாதான நடவடிக்கைகளை எந்த வகையிலும் பாதிக்கவில்லை. பேச்சு மூலம் சமாதானம் ஏற்பட வேண்டும் என 84 சதவீத மக்கள் விரும்புவதாக கருத்துக்கணிப்பு தெரிவிக்கின்றது. அரசியல் மாற்றம் ஏற்பட்டாலும் அந்த மக்களின் அபிப்பிராயப்படி முயற்சிகள் தொடரும் என நம்புகின்றோம். படிப்படியாக முன்னேறி

(12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூடல் பிரகடனம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

நேற்றுடன் முடிவடைந்த 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' நான்கு நாள் மாநாட்டில் இரண்டு முதன்மைப் பிரகடனங்கள் நிறைவேற்றப்பட்டன.

அந்த இரு பிரகடனங்களையும் நிறைவேற்றுவதற்கான ஏழு வகையான முன்னெடுப்புகளும் தீர்மானிக்கப்பட்டன.

இரு பிரகடனங்களும் வருமாறு:-

1) தமிழ் மக்களின் விடுதலையை எல்லாத்தளங்களிலும் முழுமைப்படுத்துவது. இதில் உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் ஒருங்கிணைப்பைப் பெறுவது.

2) இரண்டாயிரம் ஆண்டு கால செய்யுட் பாரம்பரியம் உடைய தமிழ் மக்களாகிய நாம் தமிழ் விழிப்பையும், தமிழ் வேர்களையும் மூன்றாவது மில்லேனியத்துக்கு - அதாவது தகவல் யுகத்துக்கும் விரிவுபடுத்தல்.

இந்த இரண்டு முதன்மைப் பிரகடனங்களையும் நிறைவேற்றுவ தற்குரிய முன்னெடுப்புக்களாவன:-

1) உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களை ஒருங்கிணைப்பதற்கான "தமிழ் மையம்" ஒன்றை ஈழத்தில் நிறுவுதல். தமிழ்த் தேசியம் எதிர்கொள்கின்ற அரசியல், பண்பாட்டு நெருக்கடி நிலைகளில் இருந்து விடுபடுவதற்கான சமூகச் சிந்தனை முறைமைகளை உருவாக்குவதற்கும் அதை நடைமுறைப்படுத்துவதற்குமான "சிந்தனைப பள்ளி"யை (School of Thoughts) கட்டமைத்தல் இதற்கு வேண்டிய துறைசார் - குறிப்பாக முறைசார் முறைசாராத நிபுணர்களை ஒருங்கிணைத்தல்.

2) உலகமயமாக்கல் சூழலில் தமிழ் - முஸ்லிம் மக்களின் பண்பாட்டு அடையாளங்களைப் பாதுகாத்தலும் புதுப்பித்தலும்.

3) தமிழ் - சிங்கள தொடர்பாடலை பரஸ்பர மொழிபெயர்ப்புக்களின் மூலம் வலுப்படுத்தல்

4) போருக்குப் பிந்திய காலத்தின் உடனடித்தேவையாக வடக்கு - கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் எல்லா வகையான வெளிப்பாட்டு வடிவங்கள் பற்றிய ஆவணப்படுத்தலையும் பாதுகாத்தலையும் உடனடியாக செயற்படுத்தல். இதில் நாட்டார் பாடல்கள் முதல் அரும்பொருள்கள் வரை அடங்கும்.

5) அருகியும் அழிந்தும் செல்லும் நிலையில் இருக்கும் பாரம்பரியக் கலை வடிவங்களை, புராதனச் சின்னங்களை அடையாளங்கண்டு மீட்பதற்கும் பாதுகாப்பதற்குமான நிறுவனமயப்பட்ட ஏற்பாடுகளை திட்டமிடுவதும் நடைமுறைப்படுத்துவதும்.

6) வருடந்தோறும் இத்தகைய தமிழ்க் கூடலை வெவ்வேறு இடங்களில் தொடர்ந்து ஒழுங்கு செய்தல்

7) இவை அனைத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ் மக்களுடைய இராணுவ நெருக்குவார மற்ற மெய்யான இயல்பு வாழ்வு இன்றியமையாததாகும். அதனைக் கொண்டு வரும் முயற்சிகளை அனைத்து ஊடகவியலாளர்களும் கலை இலக்கியவாதிகளும் முன்னெடுத்தல், ஒன்றிணைந்து செயற்படுதல். (ஐ-4)

# தேசியத் தலைவரின் கொள்கைகளை மலையக இளைஞர்கள் ஏற்கின்றனர்

## மலையக இளைஞர் பிரதிநிதி உதயனுக்குத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.23

தமிழ் மக்களின் உரிமை, பண்பாடு, கலாசாரம் போன்றவற் றைக் கட்டிக்காத்து உலகில் உள்ள தமிழ மக்கள் தலை நிமிர்ந்து வாழ்வதற்கு வழிசெய்த பெருந்தலைவர் மாண்புமிகு வே.பிரபாகரனின் கொள்கைகள், கருத்துக்களை மலையக தமிழ் இளைஞர்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் மலையக தமிழ்த்தேசிய இளைஞர் ஒன்றியத்தின் இயக்குநர் பி.சக்திவேல்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்க் கூடல் நிகழ்வின் இறுதிநாளான நேற்று வருகை தந்த மலையக தமிழ்த்தேசிய இளைஞர் ஒன்றியத்தின் இயக்குநர், 'உதயன' செய்தியாளருக்கு அளித்த செவ்வியில் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையக மக்களின் சார்பாக அமைச்சர் சந்திரசேகரனின் ஏற்பாட்டில் நாம் இந்த நிகழ்வில் கலந்து கொள்கின்றோம்.

இந்த வாய்ப்பு எமக்கு கிடைத்ததையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

கடந்த நான்கு நாள்களாக இங்கு நடைபெற்ற இந்த தமிழ்க் கூடல் நிகழ்வின் இறுதிநாளான இன்று இங்கு வாசிக்கப்பட்ட கட்டுரைகளும் நிகழ்த்தப்பட்ட உரைகளும் தமிழர்களின் புனிதமண்ணின் பாரம்பரியங்களை


சக்திவேல்

அறியும் வாய்ப்பை எமக்கு அளித்துள்ளது.

நீண்ட காலமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பல அழிவுகளை எதிர்கொண்ட பின்னரும் இப்படியான தொரு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது இலங்கையில் மட்டுமல்ல முழு உலகத்தினதும் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இத்தகைய நிகழ்வுகள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தேசியம், தாயகம் என்பனவற்றை வென்றெடுக்க வாய்ப்பளிக்கும்.

உலகத் தமிழர்கள் தலை நிமிர்ந்து தன்மானத்துடன் வாழக்கூடிய வழியை ஏற்படுத்திய உத்தமர் பிரபாகரனின் கருத்துக்களை ஏற்று தமிழ்ப்பணியை தொடர்வதற்கு நாங்களும் முழு விருப்பம் கொண்டுள்ளோம்.

நாங்கள் யாழ்ப்பாணம் வந்திருப்பது இதுவே முதல்தடவை. வரும் வழியில் விடுதலைப்புலிகளின் பொறுப்பாளர்கள், போராளிகள், காவல் துறையினர் ஆகியோரைச் சந்திக்கும் வாய்ப்பு எமக்கு கிடைத்தது. அதனையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம் - என்று தெரிவித்தார். (ஐ-4)

## உரிமை என்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், அந்த வாய்பபு வெற்றிகரமானதாக அமையவில்லை.

ஜனநாயக ரீதியில் போரா டினால் - குரல்கொடுத்தால் - இலங்கை வரலாற்றில் தமிழர்களுக்கு எந்தக் காலத்திலும் விடிவு கிட்டாது என்பதே இதற்கு அடிப்படையான காரணம்.

ஜனநாயக வழிமுறைகளின் தோல்வியே தமிழர்கள் ஆயுதம் ஏந்தக் காரணம். ஆயுதப்போராட்டம் நடைபெற்றிருக்காவிட்டால் தமிழர்கள் என்ற இனம் இந்த நாட்டில் வாழ்ந்திருக்கவே முடியாது. அதாவது இந்தநாட்டில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றுகளே இல்லாது போயிருக்கும்.

இவ்வாறு சுதந்திரமான வாழ்வுக்காக ஆயுதம் ஏந்துபவர்களை பயங்கரவாதிகள் எனப் பட்டம் சூட்டும் வழமை இந்த மணணில் இருந்து வருகிறது.

உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தமிழர்கள் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர். இந்த நிலைக்கு முடிவு கட்டப்படவேண்டும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி ஷோபனா இராசேந்திரம்

*(மாணவி - யாழ்.வல்வெட்டி இ.த.க.பாடசாலை)*

இலந்தைக்காடு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்வி ஷோபனா இராசேந்திரம் நேற்று (22.10.02) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராசேந்திரம் - விமலா தம்பதிகளின் பாசமிகு புதல்வியும் ராஜமோகன் (லண்டன்), சந்திரமோகன், பென்சன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் முருகேசு, மகாலிங்கம், றஞ்சி, விகனேஸ்வரி ஆகியோரின் பேராமகளும் தெய்வேந்திரம் (லண்டன்), மனோகரன் (லண்டன) ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.02) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எள்ளங்குளம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.சந்திரமோகன் (சகோதரன்)

*இலந்தைக்காடு,*
*வல்வெட்டித்துறை.*
(C/24382)

## திருமதி பொன்னம்பலம் செல்லம்மா

ஆறுகால்மடம், மயிலு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் செல்லம்மா நேற்று (22.10.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசமணி, சடாசிவம், நேசமணி மற்றும் தம்பிஐயா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மகேஸ்வரி, ரத்தினம் ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2002) புதன்கிழமை பிற்பகல் 4மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மயிலு வீதி,*
*ஆறுகால் மடம்*
(9814)

தகவல்:
ரத்தினம் (பேறாமகன்)

## உரிமை என்பது

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தமிழர்கள் அனுபவித்துவரும் துன்ப, துயரங்களை வெளியுலகத்திற்கு எடுத்துக் கூறுவதில் ஊடகங்கள் மிக முக்கியபங்களிப்பை ஆற்றவேண்டும்.

வடபகுதியில் தமிழர்கள் அனுபவித்த துன்ப, துயரங்களை மலையகத் தமிழர்கள் நேரடியாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு இதுவரை கிட்டவில்லை. பத்திரிகைகள் மூலமே ஓரளவு தகவல்களை அறிந்துகொள்ள முடிந்தது.

மாநாட்டின் தமிழ்க் கூடலில் கலந்து கொள்வதற்காக மலையகத்தில் இருந்து வருகைதந்துள்ள சுமார் நூறு இளைஞர்கள் போரினால் ஈழத் தமிழர்கள் அனுபவிக்கும் துன்பங்களை தென்னிலங்கைக்கு - குறிப்பாக மலையகத்துக்கு - எடுத்துச் சென்று மக்களிடம் எடுத்துக் கூறுவர்.

தமிழகத்துக்கு விஜயம் செய்த நான், உலகத்தமிழர் நலன் குறித்து அங்கு நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் பங்கு கொண்டேன். அதில் பழ.நெடுமாறனும் கலந்துகொண்டார்.

அந்தக் கூட்டத்தில் உலகெங்கும் வாழும் 35 லட்சம் தமிழர்கள் குறித்தும் அவர்களது நலன் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. விடுதலைப்புலிகள் பற்றியோ, புலிகளின் ஆயுதப் போராட்டம் பற்றியோ எதுவும் பேசப்படவில்லை. ஆனால் அந்தக் கூட்டம் முடிந்து நான் இலங்கை திரும்பிய கையோடு பழ.நெடுமாறன் 'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட மற்றும் பலரும் கைது செய்யப்பட்டனர்.

இன்று திருமாவளவனுடன் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியிருக்கின்றேன்.

வடக்கு-கிழக்கு தமிழர்கள் நலன் குறித்து எழுப்பப்படும் குரல்கள் மலையகத் தமிழர்கள் குறித்தும் எழுப்பப்பட வேண்டும். காரணம் மலையகத் தமிழர்களும் இதுவரை எத்தனையோ வகையான துன்ப, துயரங்களை அனுபவித்தனர்; அனுபவித்து வருகின்றனர்.

கடந்தகால யுத்த சூழல் காரணமாக தமிழர்கள் அனுபவித்த துன்பங்கள் அனைத்தும் ஆவணப்படுத்தப்பட வேண்டும். நவீன கருவியைப் பயன்படுத்தி இவை ஆவணப்படுத்தப்படுமானால் உலக நாடுகளில் வாழும் ஏனைய இனமக்கள் அவற்றைஅறியக்கூடியதாக இருக்கும் - என்றார் சந்திரசேகரன்

(ஐ-எ-4-9-17)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 - 06 - 1970



இறைவன் அடியில் 23 - 10 - 2000

திருமதி கருணானந்தன் அருள்வதி (B.A.)

(முன்னாள் ஆசிரியர், யாழ்.ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்)

திதி: 01.11.2002

ஆண்டு ஒன்று மறைந்ததம்மா - எங்கள்
குல விளக்கு அணைந்ததம்மா!
வெள்ளி ஒன்று மறைந்ததம்மா - எங்கள்
குரலோசை தனித்ததம்மா!
நீ மறைந்த தவிப்பினிலே நெஞ்சம் வாடுதம்மா!
நீ மறைந்த செய்தி கனவாகாதோ என்று
நெஞ்சம் தவிக்குதம்மா!
நீ வருவாயென எம்மனம் வாசல் வழி
நோகுதம்மா - ஆனால்
நீயோ என்றும் மீளாத்துயிலில் கொண்டதேனம்மா?
செங்கமலப் பாதத்திறைவன் படி மீதிருந்து
எமது துயர் தீர்ப்பாயே!

பாசத்தின் அருளே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

பிரிவின் கொடும் துயராற்றாத:

கணவர்: க.கருணானந்தன்,
மகன்: ரிதுஷன்,
தந்தை: வ.செல்லையா
சகோதர சகோதரிகள், மாமன், மாமி, உற்றார் உறவினர்கள்.

ஏழாலை மத்தி, ஏழாலை. (9785)


# ஈழத் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரது இறுதிநாள் சிறப்புரையை செவிமடுப்பதற்காக மாநாட்டுமண்டபத்துக்கு வெளியிலும் பெரும் எண்ணிக்கையில மக்கள் திரண்டிருந்தனர்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கூட்டப்பட்ட ஒரு மாநாட்டில் கலந்துகொள்வதன் மூலம், நாடு திரும்பும்போது தமிழக அரசால் அவர் கைது செய்யப்படக் கூடும் என்று நிலவும் ஊகங்களுக்கு மத்தியில் நேற்றைய அவரது உரை மிகுந்த முக்கியத்துவத்துடன் எதிர்பார்க்கப்பட்டுவநதது.

தனது நீண்ட சிறப்புரையில் திருமாவளவன் கூறியதாவது:-

திருமாவளவன் தமிழகத்துக்குப் போனால் என்ன நடக்குமோ தெரியாது என்ற ஓர் அச்சம் இங்கு தெரிவிக்கப் படுகிறது.

ஈழத்தமிழ்மக்கள் செய்திருக்கின்ற தியாகத்தைப் பார்க்கின்றபோது - உங்களுடைய வரலாற்றைப் பார்க்கின்றபோது - குறைந்த பட்சம் சிறைக்குச் செல்லக்கூட நான் தயாரில்லை என்று சொன்னால் நான் தமிழனாக வாழ்வதிலேயே அர்த்தமில்லை.

ஒவ்வொரு ஈழத்தமிழனும் ஏதாவதொரு வகையிலே வீரத் தழும்புகளோடுதான் இந்த மண்ணிலே நடமாடிக் கொண்டிருக்கிறான். வரலாற்றாகவே வாழ்ந்துகொண்டிருக்கிற உங்களைக் காணுகின்றபோது, படிக்கின்றபோது 30 மைல்களுக்கு அப்பால் பிறந்த நான், 30 மைல்களுக்கு இப்பால் பிறந்திருக்கக் கூடாதா? அப்படியொரு வாய்ப்பில்லாமல் போய்விட்டதே என்று வேதனைப்படுகிறேன்.

ஈழ விடுதலைப் போராட்ட தாக்கத்தின் விளைவாகத் தான் நான் பொது வாழ்வுக்கு வந்தேன். கல்லூரி மாணவனாக இருந்தபோது எங்கெல்லாம் ஈழத்தமிழர்கள் கூடுகிறார்களோ அங்கெல்லாம் ஆர்வத்தோடு போய் நின்றேன். அந்த உணர்ச்சியின் மேலீட்டினால், 'விடுதலைப் புலி' என்ற பெயரிலேயே ஒரு கையெழுத்து இதழையும் நடத்தி வந்தேன். குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் போன்றவர்களுக்கு சிங்கள பேரினவாத அரசு செய்த வன்கொடுமைகளை அறிந்து நாங்கள் துடித்துப்போனோம். அத்தகைய சூழலிலும் பின்வாங்கி ஓடாது ஈழமக்களுக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருந்த விடுதலைப் புலிகளின் தியாக உணர்வுகளை, தமிழக மாணவர்கள் மத்தியில் மாநாடுகள் நடத்தி வெளிப்படுத்தினோம்.

அன்றுமுதல் இன்றுவரை சுமார் 20 ஆண்டு காலமாக - இந்த ஈழம் விடியாதா? ஈழத்து மக்களின் சோகம் முடியாதா? அவர்கள் சிந்தும் இரத்தம நிற்காதா? என ஈழத்தை உற்று நோக்கிக் கொண்டிருக்கின்றோம்.

'சக்கரை நக்குவது போல் சயனைட்டை நக்கி' தியாகம் செய்கின்ற விடுதலைப் புலிகளின் தியாகத்துக்கு ஓர் எல்லை ஏற்படாதா? முற்று வராதா? என ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

எந்த மண்ணைப் பார்க்க வேண்டும் என்று எண்ணியிருந்தேனோ, எந்தப் புலிகளைக் காணவேண்டும் என ஏங்கிக் கிடந்தேனோ, அந்த மக்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று எண்ணிப் பார்க்கின்றபோது நான் நெஞ்சு கடக்கிறேன்.

தமிழகத்து மக்கள் எல்லாம் தமிழீழம் விடுதலை பெற வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். அதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அரசியல் நடத்துகிறவர்கள், அரசியல் ஆதாயத்துக்காகவே காய்கள் நகர்த்துகிறார்கள்.

இன்று தமிழ், தமிழன் என்று பேசினால் கொடும் சிறை. 'பொடா' என்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், இன்று தமிழகத்திலே இன உணர்வாளர்களுக்கு எதிராக ஏவப்பட்டு வருகிறது. தமிழ், தமிழன் விடுதலைப் புலிகள் என்று சொல்லுவதற்கு இன்று தமிழகத்தில் வாழ்கின்ற தமிழனுக்கு உரிமை இல்லை. அத்தகைய ஒரு சூழலில், நெருக்கடியில் இங்கு நாங்கள் வந்திருக்கின்றோம்.

இரண்டு தலைமுறையாக தியாகப் போராட்டத்தை எப்படி நடத்த முடிகிறது?

இதற்குப் பின்னணி என்ன?

இந்தப் போராட்டத்தை தலைமை தாங்கிச் செல்லுகின்ற தலைவர் எத்தகைய உறுதிபடைத்தவராக இருக்கின்றார்?!

இவற்றையெல்லாம் ஒரு நாள், ஒரே ஒரு நாள் இந்த மண்ணில் வந்து - கண்ணால் பார்த்துவிட வேண்டும். அதற்காகக் கண்மூடும் நிலை வந்தாலும் பரவாயில்லை, என்ற எதிர்பார்ப்போடு இருந்தோம். அந்த வாய்ப்பை இன்று கலைபண்பாட்டுக் கழகம் எங்களுக்கு வழங்கியிருக்கிறது.

ஈழத்து மண் எங்கும் இரத்தத்தால் சிவந்து கிடக்கிறது. ஒவ்வொரு தமிழனும் வரலாறாக நடமாடிக்கொண்டிருக்கிறான். ஒவ்வொரு துணுக்கும் வரலாற்றுப் பாடம் சொல்லிக்கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் வன்முறையாளர்கள்; விடுதலைப் புலிகள் தீவிரவாதிகள்; விடுதலைப் புலிகள் அப்பாவிகளைப் பழிவாங்குகிறார்கள்; வெகுஜனங்களிடமிருந்து விலகியிருக்கிறார்கள்; இவர்கள் போராட்டத்துக்கும் மக்களுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது; மக்கள் இவர்களின் போராட்டத்தை ஆதரிக்கவில்லை; புலிகள் இராணுவவாதிகளாக இருக்கிறார்கள்; இரத்தவெறி பிடித்தவர்களாக இருக்கிறார்கள்.

- இப்படித்தான் தமிழகத்து ஊடகங்கள் புலிகளைப்பற்றிச சொல்லுகின்றன. இந்திய ஊடகங்கள் புலிகளைப் படம்பிடித்துக் காட்டும் நிலை இதுதான்.

ஆனால், ஈழத்தில் நடக்கின்ற விடுதலைப் போராட்டத்தைப் போல சிங்களப் பேரினவாதத்தையும் எதிர்த்துக் கொண்டு - உலகின் நான்காவது இராணுவம் என்று சொல்லப்படுகின்ற தெற்காசிய வல்லரசான, இந்தியப் பேரரசின் மிகப் பெரிய படைகளை - எதிர்கொண்டு புறமுதுகிட்டு ஓடச்செய்த வல்லமை வாய்ந்த மக்கள் போராட்டம் ஈழ மண்ணில் நடந்திருக்கிறது; நடந்து கொண்டிருக்கிறது.

இந்தத் துணிவு எப்படி வந்தது? எதனால் வந்தது?

தீவிரவாத உணர்வால், வெறும் இராணுவ வெறியால், இந்தப் போராட்டம் இத்தனை தலைமுறைக்குத் தாக்குப்பிடிக்குமா? தொடர்ந்தும் இந்த விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது என்றால், இதற்கு மக்களுடைய ஈடுபாடு, ஆதரவு, தொடர்பு, பங்களிப்பு எதுவுமே இல்லாமல் இது சாத்தியமாகுமா? ஓர் இணையான அரசு இங்கே நடந்து கொண்டிருக்கிறது. இராணுவத்தினுடைய வெறியாட்டத்திலிருந்து தமிழ் மக்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிற விடுதலைப் புலிகளின் ஆட்சி, நிர்வாக ஆளுமை இங்கே நடந்து கொண்டிருக்கிறது. ஓர் அரசை வழிநடத்தக் கூடிய வலிமைபெற்றவனாக தமிழன் இந்த மண்ணிலே வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதற்குச் சான்றாக இங்கே பல வரலாற்றுப் பதிவுகளைக் காணமுடிகிறது. தமிழ் இனத்தின் வரலாற்றிலேயே, தமிழ் தேசிய இனத்துக்காகத் தோன்றி - வளர்ந்து - தமிழர்களின் தன்மானத்தைப் பாதுகாப்பதற்காக இராணுவ பலத்துடன வீறுகொண்டு ஒரு தலைவன் எழுந்திருக்கிறான் என்று சொன்னால், அது தளபதி பிரபாகரன் மட்டுமே! தமிழ் தேசிய இனத்துக்காக வாழ்ந்து கொண்டிருக்கின்ற தலைவர் இந்தியா தமிழர்களின் அணுகுமுறையிலேயே தமிழ்நாட்டைச் சார்ந்திருக்கின்ற ஒரு போக்குத் தெரிகிறது. தமிழ் நாட்டுத் தமிழர்களிடமிருந்து ஆதரவு கிட்டாதா? என்ற எண்ணம் உங்களிடம் இருக்கிறது. ஒன்றை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உலகெங்கும் வாழுகின்ற எட்டுக் கோடி தமிழர்களுக்கும் தலைமை தாங்குகிற - வழிகாட்டுகின்ற - தகுதியும், வலிமையும் ஈழத்தமிழர்களுக்கே - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கே - உண்டு. எனவே, நீங்கள் யாரையும் சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. யாருடைய தயவுக்காகவும் காத்திருக்க வேண்டியதுமில்லை.

ஒரு கதாநாயகனுடைய திரைப்படம் வரவில்லை என்றால், தன் உடலிலே சிவகாசிப்பட்டாசைச் சுற்றிக் கொண்டு மடிந்து போகும் அளவுக்கு சினிமா மோகம். இதுதான் தமிழகத்து நிலை. ஆனால், தனது மண் மீட்புக்காக சயனைட்டை சக்கரையாக்குகிற தியாக உணர்வு ஈழ மண்ணிலே இருக்கிறது. ஒரு நொடி சிரித்துக் கொண்டிருக்கிறான். மறுநொடி சிரித்துக்கொண்டே மண்ணுக்காக மரணிக்கிறான். இது கற்பனைகூட செய்து பார்க்க முடியாதது. சிரித்தபடியே, செருக்களமாடும் புலிகளே! எப்படி உங்களால் முடிகிறது? அப்படிப்பட்ட ஈழத் தமிழர்களுடன், தமிழகத் தமிழர்களின் வாழ்க்கையை ஒப்பிட்டுப்பார்க்கின்றபோது தமிழகம் 50 ஆண்டுகள் பின்னுக்கு நிற்கின்றது. அந்த தமிழகத்துக்கும் வழிகாட்ட வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. தமிழகத் தமிழர்களையும், தமிழ் நாட்டு மண்ணையும் காக்கவேண்டிய பெரும் பொறுப்பு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இருக்கிறது.

தமிழ் நாட்டிலே திருமாவளவன் ஈழ விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறான் என்று சொன்னால் அது வெறும் பேச்சு. என்னால் வேறு என்ன செய்ய முடியும். ஆகக்கூடியது என் உயிரைக் கொடுக்கலாம்.

பொலீஸ்காரனைக் கண்டாலே மிரண்டு ஓடுகிற போக்கு தமிழ் நாட்டிலே இருக்கிறது. யாராவது ஒரு சிவில் பொலீஸ் "என்ன, திருமாவளவன் ஈழத்துக்குப் போகிறாரா?" என்று யாரையாவது பார்த்து ஒரு முறை கேட்டால் போதும். "பொலீஸ் என்னைத் தேடிவருகிறது நீங்கள் இங்கே வர வேண்டாம்" என்று உறவினர்களே என்னைத் தடுக்குமளவிற்கு தமிழ்நாட்டிலே தமிழனின் வீரம் கொடி கட்டிப் பறக்கிறது. அந்தத் தமிழகத்துத் தமிழர்களின் ஆதரவு கிட்டவில்லையே என்று நீங்கள் ஏங்கவேண்டாம். அது எதற்கும் பயன்படாது - என்றார்.

(ஐ-9-4)

## ஈராக் மீது குண்டுவீச்சு!

லண்டன்,ஒக்.23

அமெரிக்க, பிரிட்டிஷ் யுத்த விமானங்கள் ஈராக்கின் வடக்கு வான் பரப்பில் பறந்து ஈராக்கின் விமானப் பாதுகாப்பு நிலைகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட அமெரிக்க யுத்த விமானங்கள் மீது ஈராக்கிய துருப்புகள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதை அடுத்தே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஐ-12)

## பொலீஸ் காவல்

யாழ்ப்பாணம்,ஒக்.23

காரைநகரில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. முகாமிற்கு முதற்தடவையாக பொலீஸாரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஓ-172)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகள் போன்ற பல்வேறு விடயங்கள் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன.

இன்று நோர்வே அனுசரணையாளர் குழுவை, தலைவர் பிரபாகரன் சந்திக்கும் போது நேற்று கண்காணிப்புக் குழுத்தலைவருடன் நடத்திய சந்திப்பின் பெறுபேறுகள் குறித்தும் ஆராயப்படும் என்று கூறப்படுகின்றது.

(ஐ-3-12)

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## நாட்டின்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரும் சமாதான நடவடிக்கைகளில் எந்தவித பாதிப்பும் இதுவரை ஏற்படவில்லை. 20 வருடப் பிரச்சினைக்கு ஒரே இரவில் தீர்வு காண முடியுமா? பெரும்பான்மை மக்களின் விருப்பத்தை அரசியல் தலைவர்கள் குழப்பமாட்டார்கள் என நம்புகிறோம்.

நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த சமயம் கூட்டுச் செயலணி அமைப்பு, நிதி பெறுவதற்கான கூட்டத்தைக் கூட்டுதல், 2ஆம் கட்டப் பேச்சுகளுக்கான ஏற்பாடுகள், கிழக்கு விவகாரம் ஆகிய விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினோம். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடனும் இந்த விடயங்கள குறித்து இன்று பேசவிருக்கின்றோம்.

நிரந்தர சமாதானத் தீர்வு சகல தரப்பினரின் விருப்பப்படி ஏற்பட வேண்டும் என்பதே ஜனநாயக முறையாகும். அந்த வகையில் ஜே.வி.பி. அமைப்புக்கும் ஜனநாயக முறைப்படி கருத்து கூற, கலந்துரையாடலில் பங்குகொள்ள சந்தர்ப்பம் உள்ளது - என்றார் அவர்.

(ஐ-3-8)


எமது நேற்றைய வீடியோ CD வெளியீடு
பிரபு தேவாவின்
காவேரி
வீடியோ விம்ஸ், யாழ்ப்பாணம்.

CHEMISTRY CENTRE
பலாலி வீதி, கந்தர்மடம்.
A/L 2003
PAPER CLASS
பிரிவு V
(இறுதிப்பிரிவு)
ஆரம்பம் 23.10.2002
Wed. 6-7 p.m. General
7-8 p.m. Inorganic
★ அலகு ரீதியான மீட்டல்
★ அலகு ரீதியான வினா - விடை
★ மாதிரி வினாக்கள்
★ அச்சடிக்கப்பட்ட பாடக் குறிப்புகள்
இப்பிரிவிற்கு 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.
By - அன்பழகன்
A/L 2004
Limits
ஆரம்பம் 23.10.2002 Wed. 6-7 p.m.
'வகையீடு' Thu. 6-7 p.m.
By- பிரதீபன்

Logic
S.R.J.சுதன்
DAY CLASS
தறீட்டு அளவையியல்
Paper Class
NEW SCIENCE COLLEGE
யாழ்நகர்
புதன், வியாழன் - 10.00a.m.
மிஹ்ராஜ் கல்வி நிலையம், சாவகச்சேரி.
திங், வெள்ளி 7.30a.m.
(9793)

செல்வா - SELVA
மின்சார உபகரணங்கள், பைப் வகைகள் விற்பனையாளர்கள்.
குறைந்த விலையில் தரமான பொருள்களுக்கு
தனிச்சிறப்பு வாய்ந்த, விற்பனை நிலையம்.
Note: கட்டடங்களுக்கான மின் இணைப்பு(வயரிங்) வைண்டிங் (பிளமிங்) வேலைகளும் செய்துகொடுக்கப்படும்.
இல.68, பலாலி வீதி,
திருநெல்வேலி சந்தி.
(9754)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' - இறுதிநாள்





மானுடத்தின் தமிழ்க் கூடல் நிகழ்வின் இறுதிநாளான நேற்று மாநாட்டின் நினைவாக யாழ்.வீர சிங்கம் மண்டபத்துக்கு முன்னால் உள்ள தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்களுக்கான நினைவுத் தூபிக்கு அருகே ஐந்து மரங்கள் நடப்பட்டபோது....



கலைபண்பாட்டுக் கழகத்தின் விற்பனையகத்தில் வெளியீடுகளை வாங்குவதில் மும்முரம்....





நேற்றைய நிகழ்வில் சிறப்புரை வழங்குவதற்காக வருகை தந்த மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன், வாழ்நாள் பேராசிரியர் கா.சிவத்தம்பியுடன் அளவளாவும் காட்சி.



← நேற்றைய நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கியோரில் ஒரு பகுதியினர் →





← நேற்றைய நிகழ்வில் கலந்துகொண்ட பேராளர்களில் ஒரு தொகுதியினர்.

## சர்வதேச அளவில்

# ஐ.நா. ஏற்ற சுயநிர்ணய உரிமை விடயம் ஈழத்தில் மட்டும் உள்நாட்டு விவகாரமா?

## 'தமிழ்க் கூடலில்' கேள்வி எழுப்புகின்றார் திருநாவுக்கரசு

யாழ்ப்பாணம்,ஒக்.23

ஐக்கிய நாடுகள் சபையினால் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'சுயநிர்ணய உரிமை', ஈழத் தமிழர்களுக்கு மட்டும் உள்நாட்டு விவகாரமாகிப் போனது ஏன்?

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் அரசியல் விமர்சகர் மு.திருநாவுக்கரசு.

'மானிடத்தின் தமிழ்க் கூடல்' இறுதி நாள் நிகழ்வில் காலை அமர்வில் கலந்துகொண்டு 'சர்வதேச அரசியலும் சிங்கள உயர் குழாமும்' என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச அரசியலும், உள்நாட்டு அரசியலும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ள விவகாரங்கள். ஒரு தேசம் என்ற ரீதியில், தேசங்களுக்கான சர்வதேச கொள்கைகளை முதலில் ஐரோப்பாவே வகுத்துக்கொண்டது. தேசநோக்கில் செய்யப்படுகின்ற நியாய - அநியாயங்களை நியாயம் என்றே அது ஏற்றுக்கொண்டது.

சர்வதேச சட்டங்களை ஐநா.சபை உருவாக்கியது. ஈராக் மீது தாக்குதல் நடத்தவேண்டுமா? என்பதையும் ஐநா. சபை தீர்மானிக்கும்.

ஆனால், அச்சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 'சுயநிர்ணய உரிமையை' வழங்குவதற்கு மட்டும், உள்நாட்டு விவகாரம் எனக் கூறி சர்வதேசம் ஒதுங்குகிறது.

இலங்கை அரசமைப்பு மீறப்படக் கூடாதெனக் கூறி, காலங்காலமாக தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க சிங்கள தலைமைகள் முன்வரவில்லை. தற்போது சிங்களவர்களுக்கும் பிரச்சினை என்றவுடன் அந்த யாப்பு எங்கே போனதென்றே தெரியவில்லை.

அரசமைப்பை மீறித்தான் 'தனிச் சிங்களச் சட்டம்' கொண்டுவரப்பட்டது. இப்போது இலங்கை அரசமைப்பு, மேற்கு நாடுகளின் கைகளில்!

இடதுசாரிகளை ஒழிப்பதற்காக தமிழ்மக்களுடன் கூட்டுச்சேர்ந்த ஜே. ஆர். அரசு அது நிறைவுபெற்றதும் -

இந்திய ராஜதந்திரத்தைப் பயன்படுத்தி தமிழரைத் தீர்த்துக் கட்டியது. பன்நெடுங்காலமாகக் கூடியிருந்த இந்திய - ஈழத்தமிழர்கள் மூர்க்கமாக மோதிக்கொண்டனர். தான் ஒரு துளி இரத்தமும் சிந்தாமலே தனது எதிரியை அடித்தது ஜே.ஆர்.அரசு. புலிகளின் ராஜதந்திர நகர்வுகளால் தமிழர்கள் எழுந்தனர்.

இன்று சமாதானத்துக்கான முயற்சிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. அரசும், ஜனாதிபதியும் உரசிக் கொள்கின்றன. 'ஜனாதிபதி முறையை' ஒழிக்க தான் தயாராகவே இருப்பதாக சந்திரிகா கூறிவிட்டார். அம்முறையை நீக்குவதில் ரணிலுக்கு என்ன பிரச்சினை? ஜனாதிபதி முறை நீக்கப்பட்டால் அடுத்த பிரதமராக சந்திரிகா வந்துவிடுவார் என்ற அச்சம் ரணிலுக்கு இருக்கிறது. இப்படி மு.திருநாவுக்கரசு தெரிவித்தார்.

(எ-9-8-4)

# ஆஸ்பத்திரி படுகொலைகளின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.23

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்தவேளை, இந்திய அமைதிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட டாக்டர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் உட்பட 21 ஊழியர்களின் 15ஆவது அஞ்சலி நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்களன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

காலை 10 மணிக்கு மௌன அஞ்சலியுடன் நிகழ்வு ஆரம்பமானது. வைத்தியசாலை பதில் பணிப்பாளர் டாக்டர் கணேசமூர்த்தி உயிரிழந்தவர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவித்து நினைவுச்சுடரை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் பத்மநாதன் மற்றும் இறந்தவர்களின் உறவினர்களும், வைத்தியசாலையின் ஏனைய ஊழியர், உத்தியோகத்தர்களும் ஈகச்சுடர்களை ஏற்றிவைத்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

21 பேருக்கும் 21 ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டன. நிகழ்வின்போது தேவாரம், கிறிஸ்தவகீதம் ஆகியன பாடப்பட்டதைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

(எ-15-139)

# திலீபன் வீட்டு வளவினுள் கழிவுகள் கொட்டப்படுகின்றன

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வலி.வடக்கு,ஒக்.23

இறைச்சிக்காக வெட்டப்படுகின்ற மாடுகள், ஆடுகள் மற்றும் கோழிகளின் எச்சங்களும் அவற்றின் கழிவுப் பொருள்களும் ஊரெழு - சுன்னாகம் வீதியில் உள்ள தியாக தீபம் திலீபனின் வீட்டு வளவினுள் கொட்டப்பட்டு வருவதாகவும் -

இதன் காரணமாக மேற்படி வீதியூடாகப் பயணஞ்செய்யும் பொதுமக்களும், அயலில் உள்ளவர்களும் துர்நாற்றத்தினைச் சுவாசிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் -

ஊரெழு பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த சூழ்நிலையின் போது தியாகி திலீபனின் வீடு புல்டோசர்மூலம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு அவற்றைப் பயன்படுத்தி பாதுகாப்பு அணைகள் கட்டப்பட்டுள்ள நிலையிலேயே காணப்பட்டுள்ளது. தற்பொழுது அங்கு இத்தகைய கழிவுப்பொருளகள் கொட்டப்பட்டுவருகின்றன.

இதுகுறித்து உரிய தரப்பினர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

(எ-10-86)

### பரிசளிப்பு விழா

சுழிபுரம், காட்டுப்புலம் அ.த.க. பாடசாலையின் நிறுவுநர் நாள் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பி.ப. 2மணிக்கு அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வைத்திய கலாநிதி ஆர். கணேசமூர்த்தி தம்பதியினர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-10)

### கசூரினாவில் கலாசாரச் சீரழிவு! தடுக்க குழு அமைப்பு

காரைநகர்,ஒக்.23

காரைநகர் கசூரினாக் கடற்கரையில் கலாசாரத்துக்குக் கேடுவிளைவிக்கும் நடைமுறைகள் கட்டுமீறிச் செல்வதையடுத்து, அதனைக் கட்டுப்படுத்துமுகமாக ஒழுக்காற்றுப் பிரிவினரால் கலாசார நன்னடத்தைக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஏழு பேர்கொண்ட இந்தக்குழுவின் தலைவராக காரைநகர் வடகிழக்கு கிராம சேவையாளர் இ. திருப்புகழூர்சிங்கமும், செயலாளராக வை.கா.தவராசாவும், பொருளாளராக தென்னிந்திய திருச்சபையின் காரைநகர் போதகர் S.செல்வநாயகமும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவினர் கசூரினா கடற்கரையில் கலாசாரச் சீரழிவைத் தடுக்கும் நோக்குடன் கடந்தவாரம் முதல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக இதன் தலைவர் இ.திருப்புகழூர்சிங்கம் தெரிவித்தார்.

(எ-73)


VACANCIES

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the post of Demonstrator (on Contract) for the following Departments at Faculty of Medicine upto 31.10.2002:

Community Medicine, Pathology, Microbiology, Parasitology, Forensic Medicine, Medicine, Psychiatry, Pharmacology, Obstetrics and Gynaecology, Paediatrics, Surgery.

**Salary Scale: Rs. 9,000/= (fixed) per month.**

*Note: Candidates who are awaiting the results of the Final M.B.B.S. Examination may also apply for the above post.*

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by sending a money order for Rs. 20/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna", together with a self - addressed, stamped envelop 23X30 cm. in size.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

*21.10.2002*

**Registrar,**
*University of Jaffna, Sri Lanka.*



மேகங்களுக்குள்ளே சௌகரியமாகவும் வசதியாகவும்

இப்போது ஒரு மணித்தியாலத்தில் கொழும்பில்

யாழ்ப்பாணம்



* பாதுகாப்பு * கருணை சேவை
* சௌகரியமாகவும் வசதியாகவும்

ரூ. 2425/= ஒரு பயணத்திற்கு

ஞாயிறு உட்பட கிழமைக்கு 10 முறை விமான பயணம்

பயண சீட்டுகள் பெற்றுக்கொள்ளும் இடங்கள்:

செரன்டிப் எக்ஸ்பிரஸ் பிரைவட் லிமிட்டட் - 500, காலி வீதி, கொழும்பு 6. தொலைபேசி: 505632-3, 500626
செரன்டிப் எக்ஸ்பிரஸ் பிரைவட் லிமிட்டட் - கொழும்பு விமான நிலையம், ரத்மலானை. தொலைபேசி: 625777
சீ-கேன் ஏவிரஷன் பிரைவட் லிமிட்டட் - வெள்ளவத்தை. தொலைபேசி: 074-719600 பெக்ஸ்: 074-512458
சீ-கேன் ஏவிரஷன் பிரைவட் லிமிட்டட் - கொழும்பு 01. தொலைபேசி: 074-719602-4
பிரமிட் எயா சர்விசஸ் லிமிடெட் - கொழும்பு 11. தொலைபேசி: 448719 / 338321 பெக்ஸ்: 448104
மனோஜ் எக்ஸ்பிரஸ் சர்விசஸ் - கொழும்பு 13. தொலைபேசி: 390128, 074-612656, 0777-517019
மனோஜ் எக்ஸ்பிரஸ் சர்விசஸ் - யாழ்ப்பாணம் தொலைபேசி: 0777-801038, 0777-312648 பெக்ஸ்: 021-2222508

செரன்டிப் எக்ஸ்பிரஸ் - மாற்றத்தை உணருங்கள்

Renaissance





சிறந்ததிலிருந்து விளங்குங்கள்

சிறப்பாக

அவுஸ்திரேலியாவில் உள்ள 4 சிறந்த பல்கலைக்கழகங்களை எட்லொக்கேற் தற்போது பிரதிநிதிப்படுத்துகின்றது. க.பொ.த.உயர்தரத்தில் 3 சித்திகளுடன் உலகில் உள்ள அதிஉயர்ந்த பல்கலைக்கழகங்கள் ஒன்றில் சேருங்கள். அவுஸ்திரேலியாவில் உள்ள சிறந்த எட்டுப் பல்கலைக்கழகங்களில் 4 பல்கலைக்கழகங்களாக சிட்னி, மெல்பேர்ன், அடலெயிட் மற்றும் கன்பெரா அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம், ஆகிய பல்கலைக்கழகங்கள் விளங்குகின்றன.

University of Sydney | University of Melbourne | Australian National University, Canberra | Adelaide University | Flinders University of South Australia | University of South Australia

* உலகைச் சுற்றியுள்ள ஏனைய பிரசித்தமான பல்கலைக்கழகங்களுடன், ஆனால் சமஅளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரத்துடன் ஒப்பிடுகையில் ஆகுசெலவு அனுகூலமானவை.

* நியூ சவுத் வேல்ஸ், விக்ரோரியா, தென் அவுஸ்திரேலியா மற்றும் யுஎசுவுஇன் மாநிலங்களின் தலை நகரங்களில் பிரதான பல்கலைக்கழகங்கள் அமைந்துள்ளதால், ஏதாவது மாநிலத்தைத் தெரிவு செய்யுங்கள்.

* ஃபிலின்டேர்ஸ் பல்கலைக்கழகத்தையும், தென் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தையும் நாம் பிரதிநிதிப்படுத்துகிறோம்.

* அயின்ஸ்பெரி கல்லூரியின் SAIBT/ மன்ற கற்கைத் திட்டம், மற்றும் TAFE,ன்அட்லெயிட நிறுவனம் ஆகியவற்றின் ஊடாக பல்கலைக்கழகத்திற்கான வழியை நாம் காட்டுகின்றோம்.

Eynesbury College | SAIBT South Australian Institute of Business and Technology | Adelaide Institute of TAFE

2003 பெப்ரவரிக்கான மாணவர்களின் தெரிவுவரை அவுஸ்திரேலியாவுக்கான மாணவ விசாக்கள் வழங்கல் தளர்த்தப்பட்டுள்ளது.

edlocate EDUCATION AUSTRALIA

மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:-
திருமதி கோகிலாதேவி மகேந்திரராஜா சகந்தம் வண்ணியசிங்கம்வீதி இணுவில் தெற்கு சுன்னாகம் 070 - 212641
கிழமை நாள்கள் - மாலை 5.00 - 9.00
வார இறுதி நாள்கள் - காலை 8.00 - மாலை 9.00

எட்லொக்கேற் (பிறைவேற்) லிமிற்றெற்
23/1, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 07
தொலைபேசி: 670748, 074 - 618718 ஃபக்ஸ்: 074 - 790957
ஈமெயில்: marketinge@edlocate.lk வெப்சைட்: www.edlocate.lk

Impact House of Advertising

# ஜீன் வரைபடம்



மருத்துவத் துறையின் வளர்ச்சியால் எல்லாம் புதிது புதிதாக நோய்கள் உருவாகிக்கொண்டிருக்கின்றன என்பதெல்லாம் ஒருபுறமிருந்தாலும் மருத்துவ சாதனைகளின் மகத்துவத்தை யாராலும் மறுத்துவிட இயலாது. அந்தவகையில் இப்போது புதிதாக மருத்துவத்துறையின் புகுந்திருப்பதுதான் இந்த 'ஜீன் மப்பிங்'.

நோய்களைக் கண்டுபிடிப்பதற்காக நாம் இரத்தப் பரிசோதனை சிறுநீர்ப் பரிசோதனை என்று பல்வேறு பரிசோதனைகளைச் செய்கின்றோம் அல்லவா அதுபோன்ற ஒன்றுதான் இந்த ஜீன் வரைபடமும். மனித உடலில் மிகநுட்பமான நுண்ணுயிர் அமைப்புக்களில் ஒன்று ஜீன்(Gene) இதில்தான் ஒவ்வொரு மனிதனதும் உடல்கூறுகளின் ரகசியங்கள் அடங்கியிருக்கின்றன என்கிறார்கள் விஞ்ஞானிகள். ஒரு குழந்தை பிறக்கும்போது அதன் தோல், முடி, கண்களின் நிறம் என்பன பற்றிய சகல விடயங்களும் இந்த ஜீன்களில் எழுதப்பட்டிருக்கும். எந்த வயதில் எந்தமாதிரியான நோய்கள் தாக்கும், எந்த வயதில் மரணம் ஏற்படும் என்பது உள்ளிட்ட பல அதிமுக்கிய தகவல்கள் எல்லாவற்றுக்கும் சொந்தக்காரர்கள் இந்த ஜீன்கள்தான். இதெல்லாம் பழங்கதைகள். இப்போது புதிதாக நீங்கள் அறியவேண்டியது என்னவென்றால் ஒவ்வொருவரும் தமது ஜீன் வரைபடங்களை வரைந்துகொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத்தான்.

பிரிட்டனைச் சேர்ந்த கிரேக் வெண்டர் என்ற மருத்துவர் இந்த ஜீன் வரைபடங்களை தயாரித்து வழங்கும் நிறுவனம் ஒன்றை அண்மையில் திறந்துள்ளார். இவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர் என்றாலும் பிரிட்டனில் தங்கியிருந்து ஜீன் குறித்த ஆய்வில் ஈடுபட்டு வருகின்றார். அதற்கிடையில் இந்த ஜீன் வரைபடங்கள் தயாரித்து வழங்கும் ஆய்வுகூடத்தையும் அவர் கட்டியுள்ளார். இதற்காக அவர் சுமார் 200கோடி ரூபாய்களைச் செலவுசெய்துள்ளார். இந்த ஆய்வுகூடம் மூலம் ஒருவருக்கு அவரது ஜீன் வரைபடம் தயாரித்து வழங்க இலங்கை நாணய மதிப்பில் சுமார் நான்கரைக் கோடி ரூபாய் வரை செலவாகின்றது. ஒருவரின் இரத்தத்தில் இருந்து ஜீன் வரைபடம் தயாரித்து வழங்க ஒருவார காலம் ஆகின்றது.

எதிர்காலத்தில் இந்தமுறை மிகவும் புகழ்பெற்றதும் அதி நவீன கருவிகளின் மூலம் சிலமணிநேரங்களில் ஜீன்வரைபடத்தை தயாரித்து வழங்கமுடியும் என்று நம்பிக்கை வெளியிடுகின்றார் டாக்டர் கிரேக் கூறுகின்றார். அத்துடன் சாதாரணமானவர்களும் தமது ஜீன் வரைபடத்தைத் தயாரித்துக்கொள்ளும் காலம் மிக விரைவில் வந்துவிடும் என்றும் அவர் கூறுகின்றார். அவரது ஆய்வுகூடத்தில் தற்போதே பல கோடீஸ்வரர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்துவிட்டு தமது ஜீன் வரைபடங்களுக்காகக் காத்து நிற்கின்றார்கள்.

ஆமாம்! இப்படி ஜீனில் எழுதியதை எல்லாம் விஞ்ஞானம் எதிர்காலத்தில் புட்டுப்புட்டு வைத்துவிட்டால் இனிமேல் எடுத்ததெற்கெல்லாம் சாத்திரம் பார்க்கும் நம்மவர்கள் பாடு என்னாவது!!

# அட! அப்படியா!!

## இது புதிது

கணினியின் மௌஸ்க்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய புதிய கருவி ஒன்றை பிரிட்டிஷ் மாணவன் ஒருவன் புதிதாக உருவாக்கியுள்ளான். இந்தக் கண்டுபிடிப் பாளனுக்கு எத்தனை வயது என்று கருது கின்றீர்கள் வெறும் 16 வயதுதான். தென்வேல்ஸ் மாநிலத்தைச் சேர்ந்த இந்தச் சிறுவன் தனது தாயாருக்காக இந்தக் கருவியை உருவாக்கியுள்ளார்.



கணனி இயக்குநரான தாயார் தொடர்ச்சியாக கணனி விசைப்பலகை மற்றும் மௌஸைப் பயன்படுத்தியதனால் திரும்பத் திரும்ப செய்வதால் ஏற்படும் வலியின் தாக்கத்துக்கு (Reptitive Strain injury) உள்ளாகினார். தாயின் அவஸ்தையைப் பார்க்கப் பொறுக்காத தனயன் கடும் முயற்சிக்குப் பின்னர் புதிய கருவியை உருவாக்கியுள்ளார். இந்தப் புதிய கருவியை கையில் மாட்டிக்கொண்டு சாதாரணமாக மௌஸை 'கிளிக்' செய்வது மற்றும் அசைப்பது போன்ற பாவனை செய்தால் அதனுடன் தொடர்புபட்டிருக்கும் கட்டுப் பாட்டுக் கருவி கணனிக்கு அந்தக் கட்டளைகளை வழங்கும்.



"கட்டுப்பாட்டு கருவி விரல்களின் அசைவைப் புரிந்துகொண்டு அதனை கணனிக்கு இடம்மாற்றும் இதன்மூலம் கணனித் திரையில் "சுட்டி (Cursor) இயல் பாக அசையும்"- என்று தன் கண்டு பிடிப்புப் பற்றி விளக்கினார் டொபியாஸ் பற்றர்ஸன் ஜோன்ஸ்.

இந்தப் புதிய கருவியை மௌஸ் கையுறை(Mouse Mitt ) என்று தற்போது கூறப்படுகின்றது. இந்தக் கண்டுபிடிப்பு RSIயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டும் பயன்பாடுடையதாக இருக்காது. கணனி விளையாட்டுக்களை உருவாக்கும் நிறுவனங்களுக்கு இது மிகவும் பயன்பாடுடை யதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**தயாரிப்பு : கனிமொழி**

## அவலட்சணமான அழகு



பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜாக்சன் புயல் வேக நடனத்தில் உலகப்புகழ் பெற்றவர். உண்மையில் கறுப்பினத்தவரான இவர் ஓமோன் சிகிச்சைமூலம் தனது தோலின் நிறத்தை வெள்ளையாக மாற்றிக்கொண்டார். அதுமட்டுமில்லை தனது முகம் அழகாக இருக்கவேண்டும் என்று அடுத்தடுத்து பல்வேறு சத்திரசிகிச்சைகளைச் செய்துகொண்டார். ஆனால் பிள்ளையார் பிடிக்க குரங்கான கதையாக இந்தச் சத்திரசிகிச்சைகளே இப்போது மைக்கல் ஜாக்ஸனை அவலட்சணத்துக்கு உரியவர் ஆக்கிவிட்டன என்கிறனர் மருத்துவர்கள்.

ஜாக்சனின் சிறுவயது முதல் தற்போது வரையான புகைப்படங்கள் மற்றும் அவரது டொக்கியென்டறி படங்கள் என்பவற்றைத் தீவிரமாக ஆராய்ந்து பார்த்தபின்னர் மருத்துவர்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளனர். ஜாக்சனின் முகம் இயற்கைக்கு மாறானதாகவும் அவலட்சணமானதாகவும் மாறிவிட்டது என்கின்றனர் அவர்கள்.

மைக்கல் ஜக்சன் செய்துகொண்ட பிளாஸ்டிக் சேர்ஜரிகள்மூலம் அவர் தன்னைத் தானே அழித்துக்கொண்டுள்ளார். அவரது அலங்கார ஆர்வம் சுய அழிவைத் தேடித்தந்து விட்டது. அவரது முக அழகு கெட்டுப்போவதுடன் எதிர்காலத்தில் அவர் பல பக்க விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வரும் என்கிறார்கள் டாக்டர்கள்.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதற்கும் செயற்கை அலங்காரம் ஆபத்தைத் தரும் என்பதற்கும் ஜாக்சனின் நிலை ஓர் உதாரணமாகிவிட்டது.

## தெருக்கூத்து



தெருக்கூத்து எமது பாரம்பரியக் கலைகளில் ஒன்று. மக்களிடம் இலகுவாக எடுத்துச்செல்லக்கூடிய எளிமையான கலைவடிவங்களில் அதுவும் ஒன்று. குடாநாட்டில் இன்றும்கூட நடைமுறையில் உள்ள ஓர் ஆற்றுகை வடிவம் தெருக்கூத்து. இங்கு மட்டுமென்றில்லை ஆசிய நாடுகள் பலவற்றிலும் இது ஒரு புகழ்பெற்ற கலைவடிவமாக இது இருக்கின்றது.

ஆனாலும், இந்தப் பாரம்பரியக் கலைவடிவம் கொஞ்சம் கொஞ்ச மாக அழிந்துவருகின்றது என்பது வேதனைக்குரியது. அழிந்துவரும் தெருக்கூத்து மற்றும் சாகசக் கலைகளைப் பாதுகாக்கவென சர்வதேச அளவில் அமைப்புக்களை நிறுவவுள்ளனர்.

அண்மையில் டென்மார்க்கில் கோபன்ககன் நகரில் ஐரோப்பிய யூனியன் மற்றும் ஆசிய நாட்டுத் தலைவர் கள் மாநாடு நடந்தபோது அதில் ஆசிய நாட்டு தெருக்கூத்து கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. கோபக கன் நகரின் முக்கிய தெருக்களில் தமது நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காட்டினர். சிறிய டிரம் ஒன்றில் தனது உடலை நுழைத்து ஒரு சீனக் கலைஞர் சாகசம் செய்வதையே இங்குள்ள படத்தில் காண்கிறீர்கள்.

இதுபோன்ற பல நிகழ்வுகளை தெருக்கூத்துக் கலைஞர்கள் செய்து காட்டியபோது டென்மார்க் மக்கள் வாய் பிளந்து பார்த்து நின்றனர்.

# சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையம்

உலக அறிவியல் வரலாற்றில் நடைபெறும் மிகப்பெரிய கூட்டு முயற்சிதான் சர்வதேச விண்வெளி நிலையம் (International speace station - ISS). இந்த சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைக்கும் முயற்சியில் அமெரிக்கா, ரஷ்யா, கனடா, பெல்ஜியம், ஜப்பான் மற்றும் பிரேஸில் முதலான 16 நாடுகள் ஈடுபட்டுள்ளன.

பூமிக்கு வெளியே அண்டவெளியில் உள்ள கோள்கள் மற்றும் நட்சத்திரங்கள் பற்றி ஆய்வு செய்வதற்கு பூமிக்கு வெளியே நிர்மாணிக்கப்படும் ஒரு தரிப்பிடம் இது. பல மாதங்கள் பூமிக்கு வெளியே தரித்து நின்று ஆய்வுகளில் ஈடுபடும் ஆராய்ச்சியாளர்களுக்காக இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையம் வரப்பிரசாதமாக அமையும்.


சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் மொத்த எடை 4லட்சத்து 71ஆயிரத்து 700கிலோ கிராம். இதன் சூரிய ஒளி தகடுகள் ஒரு ஏக்கர் அளவில் விரிந்து பரந்து இருக்கும். உட்பகுதி ஒரு பெரிய 'ஜம்போ ஜெட்'டின் உட்பகுதி அளவுக்குப் பெரியது. (ஜம்போ ஜெட்டின் உட்பகுதியை நீங்கள் பார்த்திருக்காவிட்டால் அதற்காக நாம் வருத்தப்பட மட்டும்தான் முடியும்).

இந்த சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தை அமைக்கும் முயற்சிகள் மிகத் தீவிரமாக நடந்து கொண்டிருக்கின்றன. இதில் 6ஆய்வு கூடங்கள் மற்றும் ஒரே நேரத்தில் 7விண்வெளி வீரர்கள் தங்கும் வசதிகள் என்பன இருக்கும். அத்தோடு விண்கலங்கள் இதில் இணைய இணைப்பு வசதிகளும் தனியாகப் பொருத்தப்பட்டுள்ளன. பரந்து விரிந்து இருக்கும் சூரிய ஒளித் தகடுகள் அருகே தண்டவாளம் பொருத்தப்பட்டபாதையும் உண்டு. இது தவிர ராட்சத இயந்திரக் கை (ரோபோ) ஒன்றும் இதன் வயிற்றுப் பகுதியில் உண்டு.

இதன் கட்டுமானப் பணிகள் 1998ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. அன்றைய தினம் கஜகஸ்தானின் விண்தளம் ஒன்றில் இருந்து ஆராய்ச்சி நிலையத்தின் முதல் பகுதி விண்ணுக்கு வெற்றிகரமாக அனுப்பப்பட்டது. ஆய்வு நிலையத்தின் மையப்பகுதியான அதற்கு 'ஜார்யா' என்று பெயரிடப்பட்டிருந்தது. 'ஜார்யா' என்றால் சூரிய உதயம் என்று பொருள்.

இதனையடுத்து 1998 டிசெம்பர் 4ஆம் திகதி எண்டவர் விண்ஓடம் மூலம் நிலையத்தின் மற்றொரு பகுதி விண்ணுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது பின்னர் ஜார்யாவுடன் இணைக்கப்பட்டது. இதன் பின்னர் 1999 மே மாதம் 27ஆம் திகதி விண்ணுக்கு சென்ற டிஸ்கவரி விண் ஓடத்தில் நிலையத்தின் மிக முக்கிய பகுதிகளும் சூரிய ஒளித் தகடுகளும் எடுத்துச்செல்லப்பட்டுப் பொருத்தப்பட்டன. 2000 ஏப்ரல் மாதத்தில் கனடா தயாரித்த இராட்சத இயந்திரக் கை விண்ணுக்குக் கொண்டு சென்று நிலையத்தில் பொருத்தப்பட்டது.

எதிர்வரும் 2005ஆம் ஆண்டுக்கிடையில் விண்வெளி நிலையத்தை முழுமையாகக் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக மொத்தம் 44முறை விண்வெளி வீரர்கள் விண்ணுக்கும் பூமிக்கும் பறக்கவேண்டியிருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. சில சமயங்களில் இது இன்னும் அதிகரிக்கலாம். ஒரு புறத்தில் விண்வெளி நிலையத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தாலும் மறுபுறத்தில் - ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட பகுதிகளில் - ஆராய்ச்சியாளர்கள் தனித்தனியாகவும் குழுவாகவும் மாதக்கணக்கில் தங்கியிருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.


விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் பணி நடக்கிறது.

356 அடி அகலமும் 290 அடி நீளமும் கொண்ட இந்த சர்வதேச விண்வெளி நிலையத்தை கட்டி முடிப்பதற்காக விண்வெளி வீரர்கள் ஏற்கனவே பல தடவைகள் விண்வெளியில் நடந்து கட்டுமானப் பணிகளையும், ஆய்வுகளையும், பழுது பார்க்கும் பணிகளையும் மேற்கொண்டுள்ளனர்.

நிலையம் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டதும் அதில், 'செல்களின் வளர்ச்சி', 'புவி ஈர்ப்புவிசை குறைவான நிலையில் மனித வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் என்ன?', 'பூமியின் சுற்றுச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எவை?' 'இனிவரும் காலத்தில் எந்த மாதிரியான மாற்றங்கள் ஏற்படும்' என்பன குறித்ததெல்லாம் விரிவான ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளும் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


3,600 ஆண்டுகளுக்கு முன்னர் மீட்கப்பட்ட செப்புத் தகடு.

இதற்கிடையில் -

பொருளாதார நெருக்கடியில் சிக்

(10ஆம் பக்கம் பார்க்க)


விண்வெளி நிலையத்துடன் இணையும் எண்டவர் விண் ஓடம்.

## சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அறிவிப்பு:

# 'லைசென்ஸ்' மற்றும் ஆவண சோதனை டிசெம்பர் 31 வரையிலும் இடைநிறுத்தம்

## மோ.சைக்கிள் பயணிகளுக்கு ஹெல்மெட் அவசியம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

சாரதி அனுமதிப் பத்திரம் உட்பட வாகன அனுமதிப் பத்திரங்கள் அனைத்தையும் பரிசோதிக்கும் நடைமுறை எதிர்வரும் டிசெம்பர் மாத இறுதி வரையும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் போது பின் இருக்கையில் இருப்பவரும் ஹெல்மெட் அணிவது அவசியமாகும்.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அதியட்சகர் ஹெட்ட தர்மசிறி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்நகரப் பகுதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறையானது இன்றிலிருந்து நடைமுறைக்கு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த காலத்தில் யாழ்.மாவட்டத்துக்கென நிரந்தரமான வாகனப் பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்படாமையால் சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டே சாரதி அனுமதிப்பத்திரம் உட்பட அனைத்து ஆவணங்களையும் பரிசோதிக்கும் நடைமுறையை டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையும் இடைநிறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இக்காலப் பகுதிக்குள் சகல ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளுமாறும் -

அவ்வாறு பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து எவ்வித தயவு தாட்சண்யமுமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் - அவர் தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து குடாநாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள வீதிகளில் பொலீஸார் தமது பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

வாகனங்களை அதிவேகமாகவும் மதுபோதையிலும் செலுத்துவோரும் விபத்துக்களில் சிக்குவோரும் பொலீஸாரினால் சோதனையிடப்படும் வேளையில் சகல ஆவணங்களையும் காட்ட வேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், மோட்டார் சைக்கிளைச் செலுத்துபவர் மட்டுமன்றி பின்னிருக்கையில் அமர்ந்து பயணம் செய்வோரும் 'ஹெல்மெட்' அணிந்திருக்க வேண்டும் என்றும் - அவ்வாறு அணியாதவர்களுக்குத் தண்டப்பணம் அறவிடும் நடவடிக்கையில் எவ்விதமாற்றமும் இல்லை எனவும் -

சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (ஒ-5-10)

## கட்டப்பிராயில் மின் தாக்கி ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,ஒக்.23

மின் இஸ்திரிப் பெட்டியை பாவித்துக் கொண்டிருந்தவேளை மின்சாரத் தாக்குதலுக்கிலக்காகி ஒருவர் உயிரிழந்தார்.

கோப்பாய் தெற்கு, கட்டைப்பிராயில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்லர் கணேஷ் (வயது53) என்பரே மரணமானவராவார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட சடலம் அங்கு இடம்பெற்ற மரண விசாரணையை அடுத்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(ஒ-15)

## இயக்கச்சி, பளை ஆலயங்களில் மீண்டும் வழிபாடு

வலிகாமம் தெற்கு,ஒக்.23

ஏ-9 கண்டி வீதி திறக்கப்பட்டதைத் தொடர்ந்து தென்மராட்சி, பளை, இயக்கச்சி போன்ற இடங்களில் உள்ள பல இந்து ஆலயங்களில் பூசை வழிபாடுகள் மீண்டும் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

மேற்படி இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள், பூசைகள் இன்றிக் கிடந்த இந்து ஆலயங்களைப் புனரமைப்புச் செய்து நித்திய பூசைகள் இடம்பெறவும் வழிபாடுகள் மேற்கொள்ளவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 18ஆம் திகதி இயக்கச்சி, மல்வில் கிருஷ்ணர் கோயில், பளை அறத்தி முருகமூர்த்தி கோயில் என்பன புனரமைக்கப்பட்டு பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று நித்திய பூசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிராயச்சித்த அபிஷேகத்தை எழுதுமட்டுவாழ பிரம்மஸ்ரீ க.நாகேஸ்வரக்குருக்கள் நடத்திவைத்தார்.

(எ-152)

## கணக்கியல் பாட செயலமர்வு கொழும்பில்

குருநகர்,ஒக்.23

1ஏபி, 1சி பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் வர்த்தகப் பிரிவில் கணக்கியல் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கு நாளையும் நாளைமறுதினமும் கொழும்பு பட்டயக் கணக்காளர் நிறுவன விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் மொழிமூலம் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளும் ஆசிரியர்களுக்கு கடமை லீவும், பிரயாணப் படியும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிய பாடசாலை அதிபர்களுக்கு இது தொடர்பாக அறிவித்து சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கருத்தரங்கில் கலந்துகொள்ளச் செய்யுமாறும் -

கருத்தரங்கு நடைபெறுமிடத்துக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன - என்றும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம்.இஸ்ஸதீன் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அறிவித்துள்ளார்.

(எ-51)

## மீளக்குடியமர்ந்த மக்களின்

# தேவைகளை இனங்கண்டு நிதியுதவிகளை உடன் வழங்குக!

## பிரதேச செயலர்களுக்கு அறிவிப்பு

வலி.வடக்கு,ஒக்.23

ஏ-9 கண்டி வீதி திறக்கப்பட்ட பின்னர் யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு, நிதி உதவியினை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி பிரதேச செயலர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் மக்களின் தேவைகளை கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் இனம்காணும் வகையில் குறிப்பிட்ட கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் கோயில் பரிபாலனசபை ஆகியவற்றின் ஒரு பிரதிநிதியையும், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரையும் கொண்ட குழு ஒன்றை இயங்கச் செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-86)

# ஒருவழிப்பாதை விதிமுறை இனி சைக்கிள்களுக்கும் பொருந்தும்!

## பொலீஸ் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.23

யாழ்.நகரில் ஒரு வழிப் பாதைகளில் வீதியை மீறி சைக்கிள்களில் செல்பவர்களும் தண்டனைக்குள்ளாவர்.

இவ்வாறு யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹெட்ட தர்மசிறி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். பொலீஸ் நிலையத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இன்றிலிருந்து பொலீஸார் இது தொடர்பான கண்காணிப்புப் பணியில ஈடுபடுவர். விதிமுறையை மீறி சைக்கிள்களில் செல்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவிதத்துள்ளார்.

இக்கலந்துரையாடலின்போது மேலும் பல விடயங்கள் பற்றி ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

அவற்றில் சில பின்வருமாறு:-

★ யாழ்.ஆஸ்ப்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, காங்கேசன்துறை வீதி ஆகியவற்றில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு தினமும் காலை 9 மணிமுதல் மதியம் 12.30 மணி வரையும் பின்பு பிற்பகல் 3 மணிமுதல் 4.30 மணிவரையும் இறுதியாக மாலை 6 மணிக்குப் பின்பும் பொருள்களை வாகனங்களில் ஏற்றி இறக்க முடியும்.

★ இந்த நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரத்தில் அவசரமான தேவை ஏற்படின் யாழ்.பண்ணைப் பகுதியில் வாகனங்களை நிறுத்தி வைத்து பொருள்களை ஏற்றி இறக்கலாம்.

★ மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாரதிகள் உட்பட அனைத்துச் சாரதிகளுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

★ வீதியோரங்களில் கட்டடங்கள் மற்றும் தற்காலிகக் கொட்டகைகள் அமைத்தல் அல்லது அனுமதி பெறாமல் கொட்டகைகள் அமைத்தால் அல்லது அனுமதி பெறாமல் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

நேற்றைய இக்கலந்துரையாடலில் யாழ்.கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் என்.வரதராசா, வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பதில் பொது முகாமையாளர் எம்.அருள்சோதிநாதன், வீதி அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்த ஜே.ஸ்ரீநிவாசன், மின்சார சபையின் அதிகாரி என். குகதாசன் மற்றும் யாழ்.வணிகர் கழக பிரதிநிதிகள், ஓட்டோ உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபை பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஒ-10-5)



யாழ்.நகரப் பகுதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல்களைத் தவிர்க்கும் முகமாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட படம்.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் (SP) ஹெட்ட தர்மசிறி அமர்ந்திருக்கின்றார். அருகில் யாழ். போக்குவரத்துப் பிரிவு பொலீஸ் அதிகாரி ஆர்.ஏ.எஸ்.பெரேரா.

## மருத்துவமாதர் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் கடமையாற்ற தமிழ்மொழிமூல குடும்ப நல உத்தியோகத்தர்(மருத்துவ மாதர்) பயிற்சிக்காக விவாகமாகாத பெண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான மாதிரி விண்ணப்பப் படிவத்தையும் ஏனைய விவரங்களையும் யாழ்.கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 'அருணஸ்' நிறுவனத்தில் பார்வையிடலாம்.

(ஒ-5)

# யாழ்ப்பாணத்திற்கான எதிர்காலத்தை வழங்குதல்

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி முற்றாக அகற்றப்பட்ட முதலாவது பிரதேசத்தை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வையொட்டி, யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தினால் இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.

யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்துடன் 'ஹேலோ' மிதிவெடி அகற்றும் குழு இணைந்து முதலாவது மிதிவெடி அகற்றிய பிரதேசத்தினை யாழ்மாவட்டத்தில் வசிக்கின்ற மக்களுக்கு கையளிக்கவிருக்கின்றது. இக்கையளிப்பு வைபவமானது நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சரசாலை ஸ்ரீ சங்கரசா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது. அமெரிக்க நிறுவனமான 'ஹேலோ' குழுவானது கெசாம்பிக்கில் இருந்து வந்த செயற்பாட்டாளர்களால் நிர்வகிக்கப்படுகின்றது. இவர்கள் சரசாலை கிராமத்தின் சுற்றுப்புறத்தில் காணப்படும் இரு வேறு மிதிவெடிப் பிரதேசங்களை, நன்கு பயிற்றப்பட்ட நாய்கள்மூலம் இனம் கண்டனர். இவர்கள் இந்த முறையைக் கையாண்டு 75ஆயிரம் சதுரம் மீற்றர்கள் பரப்பிலிருந்து 989 மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்களை அகற்றியுள்ளனர். மற்றும் 20 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பில் 121 மிதிவெடிகள் மற்றும் வெடிப்பொருள்களை அகற்றியுள்ளனர். 'ஹேலோ' குழு மிதிவெடி அகற்றும் பணியை சரசாலைக் கிராமத்தில் கடந்த மே மாதம் தொடங்கி தற்போது முழுமையாகவும், பாதுகாப்பாகவும் நிறைவேற்றியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மிதிவெடி வெடிப்புச் சம்பவங்கள் மக்களுக்கு ஒரு பெரும் அச்சுறுத்தலாக உள்ளன. புலம்பெயர்ந்த மக்கள் இருப்பதற்கு ஒரு நிலம் தேவை என்பதால் மிதிவெடி அபாயம் உள்ள இடங்கள் என்று கூடச் சிந்திக்காமல் தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியேறுகிறார்கள். இதன் விளைவாக பல மிதிவெடிச் சம்பவங்களுக்கு உட்படுகிறார்கள் ஆகவே, கண்ணிவெடிகளை அகற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதோடு, மக்களுக்கு மிதிவெடி பற்றிய அறிவை வழங்கவேண்டியுள்ளது. தென்மராட்சியில் 2002ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து இன்று வரை 44 வெவ்வேறு சம்பவங்களில் 54 பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கை இராணுவமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் கடந்த கால யுத்த நடவடிக்கைகளின்போது புதைத்த பெருமளவு மிதிவெடிகளை அகற்றுவதை யாழ்.மாட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் ஒருங்கிணைத்து உள்ளது. மிதிவெடிகளை அகற்றுவதன்மூலம் விவசாயம், வீடமைத்தல், கால்நடை வளர்ப்பு போன்ற தேவைகளைப் பூர்த்திசெய்யமுடிகிறது. 'ஹேலோ' குழுவானது மிதிவெடி அகற்றத் தொடங்கியதன் பிறகு சரசாலையில் மீளக்குடியேறும் மக்கள் பாதுகாப்புடன் கூடிய ஒரு வாழ்க்கையை ஆரம்பிக்க கூடியதாகவுள்ளது.

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்ப்பாணம் சதுரங்கச் சம்மேளனத்தால் இலங்கை சதுரங்க அணித் தெரிவு, இலங்கை சம்பியன் தெரிவு என்பவற்றுக்காக நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் அடுத்த கட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

எஸ்.திருச்செல்வம் (பருத்தித்துறை), எஸ்.கோபிகவேணஷ் (யாழ். இந்துக் கல்லூரி), பிறிவேதினா (வேம்படி மகளிர் கல்லூரி). எஸ்.சுஜநீப் (மகாஜனக் கல்லூரி பழைய மாணவன்).

இச்சுற்றுப் போட்டிகளுக்கு பிரதம நடுவர்களாக வி.ரி.எஸ்.வித்தியாதரன், வி.ரி.எஸ்.சிவோதயன் ஆகியோரும் உதவியாளராக பாலகுமாரும் செயற்பட்டனர். (ஒ-5)

* * *

வலி.வடக்கு.ஒக்.23

தீவகக் கல்விவலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று இடம்பெவுள்ளன.

காலை 9.00 மணிமுதல் புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

### 16வயதுப் பிரிவு

வேலணை மத்திய கல்லூரி எதிர் காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்.

### 18வயதுப் பிரிவு

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி எதிர் வேலணை மத்திய கல்லூரி.

பிற்பகல் 1.30 மணிமுதல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் 14வயதுப் பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் புங்குடுதீவு மகாவித்தியாலயமும் புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாலயமும் மோத உள்ளன. (ஒ-5-86)

* * *

யாழ்ப்பாணம்,ஒக். 23

யாழ்.மாவட்ட அமெச்சூர் வெய்வல்லுநர் சங்கம் நடத்தும் ஆடகளப் போட்டிகள் எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்றும் வீரர், வீராங்கனைகள் நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ்.கஸ்தூரியார் வீதியில் இயங்கும் 'அருணஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்பொட்' இல் தமக்குரிய இலக்கங்கள் மற்றும் கையேடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்மாவட்ட மெய்வன்மைச் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.